# BOOK OF ABSTRACTS

## LIBRARIES AND SOCIETIES CONNECT: STRENGTHENING THE BONDS THROUGH COMMUNITY OUTREACH

## 18TH NATIONAL CONFERENCE ON LIBRARY AND INFORMATION SCIENCE NACLIS 2024

### SESSION - 01

**18th of April 2024**

Organized by

**Sri Lanka Library Association (SLLA)**

# BOOK OF ABSTRACTS

**18th National Conference on**
**Library and Information Science**
**NACLIS 2024**
**Session 01**

"Libraries and Societies Connect: Strengthening the Bonds through Community Outreach"

Organized by
Sri Lanka Library Association (SLLA)
18th April 2024

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

This work is distributed under the terms of the creative commons attribution 4.0 license (unless stated otherwise) which permits unrestricted use, distribution, and reproduction in any medium, provided the original work is properly cited. Copyright is retained by the author(s). All data, views, opinions and information published in this book of abstracts are the sole responsibilities of the authors. Neither the Sri Lanka Library Association nor the members of the editorial board are in anyway responsible for them.

ISBN 978-624-5987-04-7
ISSN 2682-7050

**Conference Advisors**
Mr. Preethi Liyanage
Dr. R. D. Ananda Tissa
Dr. Ruwan Gamage
Ms. Varuni Gangabadaarachchi

**Conference Chair**
Dr. (Mrs). M. M. Mashroofa

**Co- Chair**
Mr. S. Santharooban

**Conference Secretary**
Mrs. T. Janen

**Co- Secretary**
Mr. A. L. M. Mushtaq

**NACLIS 2024 Organizing Committee**
Conference Coordinators:

| | | |
|---|---|---|
| Registration | : | Mrs. T. Janen |
| | | Mr. U. L. Fowsh |
| Web, Media & Publicity | : | Mr. C. N. D. Punchihewa |
| Finance | : | Ms. K. N. Samanthi |
| | | Mr. M. Ragavan |
| Technical programme | : | Mr. A. C. Aslam Saajith |
| | | Mr. A. Asath |
| Rapporteur | : | Mrs. Yanika Nandasena |
| | | Mr. A. K. Jaufer |
| | | Mr. C. M. A. Munas |
| | | Mr. P. M. Hithayathulla |
| Food and Logistics | : | Mr. S. L. M.Sajeer |
| | | Mr. Anver Sathath |
| | | Mrs. Nazeera Abdul Azees |
| | | Mr. A. K. Ashraf |
| | | Mrs. S. Inpam |
| | | Mrs. M. C. Nafila |

**Editor in Chief**: Mrs. T. Janen

**Editorial Panel:**
Dr. (Mrs.). M. M. Mashroofa
Mr. S. Santharooban
Mrs. T. M. Seneviratne
Mr. M. C. M.Azwar
Mr. A. M. Nahfees
Dr. S. Ketheeswaren

**Typesetting:** Miss. Ushajini Murugaratnam

**Layout & Print:** Jesa Grafix, Maruthamunai.

**Publisher:**
Sri Lanka Library Association
Organization of Professional Associations,
Sri Lanka Professional Centre,
275/75, Stanley Wijesundara Mawatha,
Colombo 07, Sri Lanka
Tel/Fax: +94-11-2589103
Email : info@slla.lk

**Sponsors:**



## Message from the President of the SLLA

**Mr. Preethi Liyanage**
President, Sri Lanka Library Association 2023/2024

Dear esteemed colleagues,

I am truly honoured to address this distinguished gathering at the National Conference on the crucial topic of "Libraries and Societies Connect: Strengthening the Bonds through Community Outreach." As the President of the Sri Lanka Library Association, I feel a deep sense of responsibility to champion this because that lies at the heart of our profession.

Libraries serve as the cornerstone of knowledge and enlightenment in every society. They are not just buildings filled with books; they are vibrant hubs of learning, connection, and progress. In today's rapidly evolving world, where technology shapes the way we access information, libraries play an even more vital role in bridging the digital divide and ensuring equal opportunities for all.

Community outreach is the lifeblood of any library. It is through engaging with our communities that we truly understand their needs, hopes, and aspirations. By reaching out to schools, universities, local organizations, and marginalized groups, we can extend the impact of our libraries beyond their physical walls.The theme of this conference reminds us of the intrinsic link between libraries and societies. As we strive to strengthen this bond, let us remember that our ultimate goal is to empower individuals, enrich communities, and foster a culture of lifelong learning. I urge each one of you to share your experiences, insights, and best practices during this conference. Let us learn from each other, inspire one another, and reaffirm our commitment to making libraries the beating hearts of our societies.

At this juncture, I thank Prof. (Dr) Rameez Aboobucker, the Vice Chancellor of the South Eastern University of Sri Lanka for his generosity in providing the venue to conduct this conference at the auditorium, Faculty of Technology. Success of this international conference depends on the dedication of the Conference Chair Dr. M.M. Mashroofa, Senior Assistant librarian of the South Eastern University of Sri Lanka and Convener of LIS Research Group of the SLLA, Conference Co-Chair Mr. S. Santharooban, Deputy Librarian, Eastern University, Sri Lanka, Mrs. Thivya Janen, Conference Secretary, members of the Advisory Committee, Council and the Executive Committee of the SLLA and the members of the organizing committees.

As the president of SLLA, I would like to extend my heartiest congratulations to the keynote speaker, guests, invited speakers, chairpersons, special invitees, paper presenters, and all the participants.



## Message from the Chief Guest

**Prof. (Dr.) A. Rameez**
Vice-Chancellor
South Eastern University of Sri Lanka

It is with great pleasure and honor that I extend my warm greetings to all participants of the National Conference on Library and Information Science 2024, themed “Libraries and Societies Connect: Strengthening the bond through Community Outreach." As the Chief Guest, I am delighted to be part of this significant event.

The theme of this conference, "Libraries and Societies Connect," underscores the pivotal role libraries play in fostering connections within societies. It highlights the importance of community outreach initiatives in strengthening these bonds, thereby enhancing the impact of libraries on societal development.

One crucial aspect in this regard is fostering a robust research culture among library professionals, particularly within the public and school library systems. Research not only enriches the knowledge base of library professionals but also enhances the quality of services provided to the community. It empowers librarians to adapt to evolving information landscapes, thereby ensuring that libraries remain relevant and responsive to the needs of diverse user groups.

I commend Mr.Preethi Liyanage, President of the Sri Lanka Library Association for his initiative to conduct this conference in the local language. This decision not only facilitates greater participation from public librarians but also fosters a conducive environment for research dissemination and collaboration within local communities.

I would also like to extend my heartfelt appreciation to Dr. M.M.Mashroofa, the Conference Chair, and her dedicated team for their tireless efforts in organizing this

conference. Their commitment and hard work have undoubtedly contributed to the success of this event, providing a valuable platform for dialogue, collaboration, and knowledge exchange.

Furthermore, I express my sincere gratitude for selecting the South Eastern University as the venue for this conference. The university's serene surroundings and state-of-the-art facilities provide an ideal setting for scholarly discourse and intellectual exchange. I am confident that our university's hospitality will enhance the overall experience for all participants.

To all the presenters who will be sharing their research papers and insights at this conference, I extend my sincere appreciation. Your contributions are instrumental in advancing the field of Library and Information Science and in shaping the future direction of libraries in our society.

In conclusion, I am confident that this conference will serve as a catalyst for meaningful discussions, collaborations, and initiatives aimed at strengthening the bond between libraries and societies. Let us seize this opportunity to inspire, innovate, and create positive impacts that resonate within our communities.

Best Wishes!!



# மாநாட்டுத் தலைவரின் ஆசிச் செய்தி

**கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றூபா**
சிரேஷ்ட உதவி நூலகர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒருங்கிணைப்பாளர், ஆய்வுக் குழு 2023 / 2024
இலங்கை நூலக சங்கம்

‘‘நூலகங்கள் மற்றும் சமுகத்தின் இணைப்பு: சமுக விரிவாக்கல் முலம் பிணைப்புகளை வலுப்படுத்துதல்’’ என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை நூலக சங்கம் (SLLA) பெருமையுடன் ஏற்பாடு செய்திருக்கும் நூலக மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய மாநாட்டிற்கு (NACLIS 2024) ஆசிச் செய்தியை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் இந்த தேசிய மாநாட்டின் தலைவராக பணியாற்றுவது உண்மையாகவே கௌரவம் மற்றும் பாக்கியம் என்று நம்புகின்றேன்.

2003ம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை நூலக சங்கம் 17 தேசிய மாநாடுகளையும் 3 சர்வதேச மாநாடுகளையும் நடாத்தியுள்ளது. உள்நாடு மற்றும், உலகளாவிய ரீதியில் ஆராய்ச்சியாளர்கள், நூலகர்கள் மற்றும் நூலகக் கல்வியாளர்கள் இம்மாநாடுகளில் பங்கேற்று நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். இவ்வருடம் உள்ளுராட்சி மன்றங்களின் நூலகங்கள், தேசிய மொழிகளில் புலமை வாய்ந்த நூலகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்கள் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தி, நூலக மற்றும் தகவல் அறிவியல்களுக்கான தேசிய மாநாட்டை நடாத்துவதில் பெருமிதமடைகிறேன். இம்மாநாட்டின் முதன்மை நோக்கம், நூலகர்களுக்கு தாய்மொழியில் அவர்களின் ஆய்வுக் கண்டுபிடிப்புகள், சிறந்த நடைமுறைகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றைப் பேசவும், விவாதிக்கவும், மற்றும் பகிர்ந்து கொள்ளவும் தேவையான களம் அமைத்துக் கொடுப்பதாகும்.

இம்மாநாட்டின் கருப்பொருள், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் (LIS) தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நூலகங்களை எவ்வாறு சமூகங்களுடன் இணைக்க முடியும் என்பதைப் பற்றி சிந்திக்க அனுமதிக்கிறது. மேலும் தற்போதைய தலைமுறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பிணைப்புகளை வலுப்படுத்துகிறது. இத்தொனிப்பொருள், நமது பிராந்திய நூலகங்களின் நிலையை வெளிப்படுத்தவும், சர்வதேச பரவல், பேரழிவுகள், பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிகள் போன்ற பல்வேறு வகையான சவால்களுக்கு மத்தியில் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய நூலகங்கள் எவ்வாறு புதுமையான நூலகச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், தகவலுக்கான சமமான அணுகல், திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் சேகரிப்புகளை மேம்படுத்துதல் போன்ற உத்திகளைக் கண்டறியவும் வழிவகுக்கும் என்று நம்புகின்றேன்.

பல்வேறு தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் நூலகம் மற்றும் தகவல் சேவைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும்

நாடுகளின் சமூகச் செழுமை தொடர்பான தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் சவால்களுக்கு தீர்வுகாண்பதற்கு புதுமையான மற்றும் உயர் தொழில்நுட்ப நூலக சேவைகள் தேவை. எனவே எமது தாய் நாட்டின் நிலைத்தன்மை மற்றும் செழுமைக்கான வளர்ச்சியில் நூலகம் மற்றும் தகவல் அறிவியல், முக்கிய பங்கு வகிக்கிறது, இதனால் சிறந்த உலகிற்கு வழிவகுக்கிறது.

இந்த நிகழ்வை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவது இலங்கை நூலகச் சங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். மேலும், இவ்விழாவில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பது மற்றொரு பெருமை. இலங்கையின் மிகப் பெரியதும் பழமையானதுமான பேராதனை பல்கலைக்கழகத்தின் நூலகர் திருவாளர் R. மகேஸ்வரன் அவர்கள் முதன்மை பேச்சாளராக கலந்து கொள்வதில் நான் மேலும் மகிழ்ச்சியடைகின்றேன். அதேபோன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நாகராசா மணிவண்ணன், கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி W. J. ஜெயராஜ், மற்றும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி U.L. அப்துல் மஜீட் ஆகியோர்களின் பங்களிப்பும் போற்றத்தக்கது.

இலங்கை நூலக சங்கத்தின் தலைவர் திருவாளர் ப்ரீதி லியனகே, முன்னாள் தலைவர் கலாநிதி R.D. ஆனந்த திஸ்ஸ, மற்றும் பொதுச் செயலாளர் திருமதி. வருணி கங்காபடாராச்சி அவர்களுக்கும் எனது மனமார்நத நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும். இவர்கள் மாகாண மட்டத்தில் தாய்மொழி மூல மாநாடுகளை நடாத்த வேண்டும் என்ற சிந்தனையை தேசிய நூலக சங்கத்தின் பேரவைக்கு பரிந்துரைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் இணைத்தலைவர் திருவாளர் சாந்தரூபன், செயலாளர் திருமதி திவ்யா ஜனன், மாநாட்டு இணைச்செயலாளர் ஜனாப் A.L.M. முஸ்தாக், மற்றும் ஜனாப் U.L.M. பவுஸ் இந்த நிகழ்வை வெற்றியடையச் செய்த ஏனைய ஏற்பாட்டுக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர் குழு உறுப்பினர்கள், மற்றும் மதிப்பீட்டாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம அதிதி, முதன்மைப் பேச்சாளர், கௌரவ அதிதிகள், பேச்சாளர்கள், தொழில்நுட்ப அமர்வுகளின் தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், கட்டுரை வழங்குபவர்கள், கட்டுரை ஆசிரியர்கள், இணை ஆசிரியர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்ளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாடு உங்கள் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் மற்றும் வெற்றிகரமானதாகவும் அமைய வேண்டும் என ஆசிக்கிறேன்.

NACLIS 2024 இன் முடிவுகள் பயனுள்ள, திறமையான, நூலக மற்றும் தகவல் சேவைகள் மூலம் நூலகங்களுக்கும் சமூகங்களுக்கும் இடையிலான இணைப்புகளை வலுப்படுத்த உதவும் என்று நான் திடமாக நம்புகிறேன்.



## மாநாட்டு இணைத்தலைவரின் ஆசிச் செய்தி

**திரு. எஸ். சாந்தரூபன்**
பிரதி நூலகர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இலங்கை நூலகச் சங்கம் முதன்முறையாக கிழக்கிலங்கையில் நடாத்துகின்ற நூலகவியல் தகவல் விஞ்ஞான ஆய்வு மாநாட்டிற்கு இணைத் தலைமை வகிப்பதிலும் இந்த மாநாட்டு ஆய்வு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிலும் நான் மிக்க பெருமிதமும் மகிழ்வும் அடைகிறேன்.

நூலகவியல் தகவல் விஞ்ஞானம் என்கின்ற ஒரு பன்முகப் பரிமாணங் கொண்ட இத்துறையானது தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்ற ஒரு விஞ்ஞானத் துறையாகும். நூலகங்களையும் தகவல் நிலையங்களையும் மையப்படுத்தி வளர்ந்து வருகின்ற இத்துறை இவற்றிற்கு அப்பாலும் சென்று கணினி தொழினுட்பத்துயைிலும் தனது வேர்களை செலுத்தியுள்ளது. இத்துறையில் நடைபெறுகின்ற ஆய்வுகளே இதனை மென்மேலும் உரமூட்டுவதற்கு உதவுகின்றது. ஆயினும் இத்துறையில் ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வு மாநாடுகளும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே காணப்படுகின்றன. தாய் மொழியிலே இத்தகைய ஆய்வுகளைச் செய்வதற்கும் வெளியிடுவதற்கும் ஆய்வு மாநாடுகளில் பிரசுரிப்பதற்குமான சந்தர்ப்பங்கள் வெகு அரிதாகவே காணப்படுகின்றன. இந்த வகையில் இலங்கை நூலகச் சங்கமானது முன்மாதிரியாகச் செயற்பட்டு தாய்மொழியில் ஆய்வு மாநாட்டை நடாத்த முன்வந்துள்ளது. இதற்கு முதற்கண் இலங்கை நூலகச் சங்கத்திற்கு பாராட்டினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆய்வு மாநாடானது தமிழ் மொழியை அலுவலக மொழியாகப் பயன்படுத்துகின்ற எமது பொது நூலகர்களுக்கும் ஏனைய அரச நிறுவன நூலகர்களுக்கும் பெரிதும் நன்மை பயக்கும் என்பதும், நூலகவியல் தகவல் விஞ்ஞானத்துயைில் புதிய ஆய்வாளர்களை உருவாக்கும் என்பதும் திண்ணம். இத்தகைய ஆய்வு மாநாடுகள் நூலகர்களது ஆய்வுத் திறனையும் தொழில் வாண்மையையும் விருத்தி செய்வதால், நூலகங்கள் வினைத்திறனாகச் செயற்படுவதற்கு வித்திடும்.

இந்த ஆய்வு மாநாட்டினை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் நடாத்துவதற்கு அனுமதிதந்து பிரதம அதிதியாகவும் சிறப்பிக்கும் தென்கிழக்குப் பல்கலைகழகத்தின் மதிப்பார்ந்த உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் அவர்களுக்கு நன்றியினைத்

தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இந்த ஆய்வு மாநாட்டினை கிழக்கிலங்கையில் நடாத்துவதற்கு அனுமதியளித்த இலங்கை நூலகச் சங்கத்தின் பேரவைக்கும் அதன் தலைவர் திருவாளர் பிறீதீ லியனகே அவர்களுக்கும் பாராட்டினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆய்வு மாநாட்டின் தலைவராக இருந்து எம்மை வழிநடாத்திய தென்கிழக்குப் பல்கலைகழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி எம் எம். மஸ்றூபா அவர்களுக்கும் இதன் செயலாளராகவும் மாநாட்டு மலரின் ஆசிரியராகவும் செயற்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி திவ்வியா ஜனன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆய்வு மாநாட்டில் தங்களது ஆய்வு அளிக்கைகளை வெளியிட வந்திருக்கும் நூலகர்கள் அனைவருக்கும் பாராட்டினைத் தெரிவித்துக்கொள்வதோடு இந்நிகழ்வு சிறப்பு நடைபெற வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



## Message from the General Secretary

**Ms. Varuni Gangabadaarachchi**
Librarian, Public Library, Colombo
General Secretary 2023/2024
Sri Lanka Library Association

I am honoured to extend my warm greetings to the invited guests and all participants of the NACLIS session I. This year's conference theme is “Libraries and Societies Connect: Strengthening Bonds through Community outreach.” The theme itself denotes the importance of libraries in transforming lives. This year, the NACLIS team showcases their dedication to the field of LIS by organizing two sessions especially for state sector librarians to share their research experiences in local languages.

Two sectors deal with the school community and the general public, festuring rich research experiences and case studies specifically related to localities. However, they lack a platform to showcase, share, and engage within the sectors. Hence, the SLLA took a step to inculcate research habits among school and public librarians.

The first session is dedicated to Tamil-speaking state sector librarians, especially public and school librarians. The librarians of the northern and eastern provinces who collaborated with academic librarians in the area to train research methodology and scientific writing.

These proceedings serve as a platform to exchange groundbreaking research, innovative ideas, and practical experiences that shape the future of our profession. Together, we can explore emerging trends, examine the impact of evolving technologies, and identify strategies to bridge the information divide across diverse communities.

I would like to express my deepest gratitude to the Organizing Committee, South

Eastern University of Sri Lanka, and the professionals for their relentless efforts in bringing this conference to reality. Their dedication and meticulous planning have ensured that this event is a resounding success. I also extend my appreciation to the esteemed panel of reviewers and the authors whose groundbreaking research has enriched this collection of proceedings.

I encourage all participants to engage in vibrant discussions, explore new collaborations, and forge lasting connections. Let these conference proceedings be a catalyst for transformative ideas, inspiring future research, and innovative solutions that will shape the future of library and information sciences, especially in the state sector.

Together, we have the power to unlock the doors of knowledge, empower individuals, and build a brighter future. I wish you all a fruitful and memorable conference.

# CONTENTS


| | |
|---|---|
| Message from the President<br>Mr.Preethi Liyanage<br>Sri Lanka Library Association | i - ii |
| Message from the Chief Guest<br>Prof. (Dr). A. Rameez<br>Vice Chancellor, South Eastern University of Sri Lanka | iii - iv |
| Message from the Conference Chair<br>Dr. (Mrs). Mohamed Majeed Mashroofa<br>Senior Assistant Librarian, South Eastern University of Sri Lanka | v - vi |
| Message from the Conference Co-Chair<br>Mr. S. Santharooban<br>Deputy Librarian, Eastern University, Sri Lanka | vii - viii |
| Message from the General Secretary<br>Ms. Varuni Gangabadaarachchi<br>Sri Lanka Library Association | ix - x |
| Experts' Views<br>"Libraries and Societies Connect: Strengthening the Bonds through<br>Community Outreach" | |
| Keynote Address<br>Mr. R. Maheswaran<br>Librarian, University of Peradeniya | 2 - 3 |
| Address of the Guest of Honour<br>Dr. W. J. Jeyaraj<br>Librarian. Eastern University, Sri Lanka | 4 - 7 |
| Address of the Guest of Honour<br>Mr. N. Manivannan (SLAS I)<br>Commissoner of Local Government (CLG),<br>Dept of Local Government, Eastern Province | 8 - 11 |
| Address of the Guest of Honour<br>Dr. U. L. Abdul Majeed<br>Dean, Faculty of Technology, South Eastern University of Sri Lanka | 12 - 13 |

## Technical Sessions


| | | |
|---|---|---|
| 1. | பாடசாலை நூலக கற்றல்வள நிலையத்தினை உயர்தர மாணவர்கள் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்<br>**இரத்தினகுமார் குபேசன்[1], விஜயாழினி ரவீந்திரன்[2]** | 15 - 16 |
| 2. | Effect of Motivation on Job Satisfaction of Teacher Librarians in Government Schools in Sri Lanka: Special Reference to Vavuniya District<br>**S. Shanmugathasan** | 17 |
| 3. | பாரம்பரியங்களையும் முதுசங்களையும் பாதுகாப்பது அரும்பொருட்சாலை: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாசார அரும்பொருட்சாலையினை அடிப்படையாகக் கொண்ட நேர்வுநிலை ஆய்வு<br>**எஸ்.எம். பயாஸ்[1], ஞா. விஜித்சரண்யா[2], உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[3]** | 18 - 19 |
| 4. | நூலகங்களில் பொருத்தமான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பேணுகை முறைகளை ஆராய்தல்<br>**காயத்திரி நவீரதன்** | 20 - 21 |
| 5. | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு மாணவர்களின் ஆய்வுகளுக்கு பல்கலைக்கழக நூலகத்திலுள்ள மின்னணு வளங்களின் பயன்பாடு: கூட்டமைப்பு வளங்கள் தொடர்பான ஆய்வு<br>**உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[1], முஹம்மட் மஜீட் மஸ்றூபா[2]** | 22 - 23 |
| 6. | கொவிட் காலத்தின் பின்னரான இளங்கலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கம்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு<br>**அசனார் அலியார்[(1)], சுலைமா லெப்பை முஹம்மட் சஜீர்[(2)], இளையதம்பி அப்துல் ஹலீம்[(3)]** | 24 - 25 |
| 7. | கடந்த கால பரீட்சை வினாத்தாள்களும் இளமானிப்பட்ட மாணவர்களின் பாவனையும்: தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட நூலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு<br>**சம்சுதீன் இன்பம்[1], முஹம்மட் மஜீட் மஸ்றூபா[2], எம்.சீ. நாபிலா[3]** | 26 - 27 |
| 8. | Identifying Imperative Aspects to Build Smart Library Services in Sri Lanka<br>**M. N. Thasneem** | 28 - 29 |
| 9. | பாடசாலை நூலகச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் உள்ளக மேற்பார்வையின் முக்கியத்துவம்<br>**முகமட் உசனார் நவ்பர்காந்** | 30 - 31 |

| | | |
|---|---|---|
| 10. | யாழ் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ் செய்திப்பத்திரிகைகளின் சேகரிப்பும் ஆவணப்படுத்தலும்<br>**பி. தயாளினி** | 32 - 33 |
| 11. | Reading Habits of Children Using Public Libraries in Jaffna District, Sri Lanka<br>**Sandaresee Sudusinghe[1] and Kalpana Chandrasekar[2]** | 34 - 35 |
| 12. | கிழக்கு மாகாணத்திலுள்ள பொதுநூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் தற்போதைய நிலையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்<br>**லவண்யா ஜெகதீஸ்பரன்** | 36 - 37 |
| 13. | வாசகர் சேவைகளை மேற்கொள்ளும் போது அட்டாளைச்சேனை பிரதேச சபை நூலகங்கள் நோக்கும் சவால்கள்<br>**அப்துல் கரீம் அன்வர் சதாத்** | 38 - 39 |
| 14. | நூலக சேவையில் கண்டறியும் திறனின் (Locational Skill) பயன்பாடு மட்டக்களப்பு மண்முனைப்பற்று பொது நூலக ஊழியர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு<br>**B. பிரசாந்தன்** | 40 - 41 |
| 15. | பொது நூலகங்களை சமூக இணைப்புச் செய்வதில் நூலகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்<br>**எம்.ஏ.சி. ஹரீஷா** | 42 - 43 |
| 16. | மருதமுனை பொது நூலகத்தில் சமமான தகவல் வழங்குவதில் உள்ள சவால்கள்: ஒரு சூழல் ஆய்வு<br>**முஹம்மது அபூபக்கர் பரீஸ்[1], உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[2]** | 44 - 45 |
| 17. | மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தி சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குவதனூடாக குறைந்த கல்வியறிவு கொண்ட சமுதாயத்தை குறைப்பதில் பொது நூலகங்களின் வகிபாகம்<br>**ராஜு அச்சலா சுகந்தினி** | 46 - 47 |
| 18. | மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகங்களின் சேவை மதிப்பீடு<br>**றமா ராசலிங்கம்[1], த. சிவராணி[2], செ. சாந்தரூபன்[3]** | 48 - 49 |
| 19. | இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொது நூலகங்களின் சவால்களை ஆராய்ந்து அவற்றின் நிலைத்தன்மைகளை மேம்படுத்துதல்<br>**A.L.M. முஸ்தாக்** | 50 - 51 |
| | List of Reviewers | 52 |
| | Author Index | 53 |

# Experts' Views

## “Libraries and Societies Connect: Strengthening the Bonds through Community Outreach”



# முதன்மை பேச்சாளரின் உரை

**திரு. ராசையா மகேஸ்வரன்**
பல்கலைக்கழக நூலகர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

## மானுட சமூகத்தில் நூலகம்: அறிவு, கலாசார மற்றும் வாழ்நாள் நீடித்த கல்வி வளர்ச்சியினது மத்திய நிலையம்

மானுட வர்க்கத்தின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு சமூகத்தில் கல்வி, கலாசார, அறிவு வளர்ச்சி மற்றும் தகவல் தேடல், ஆயுள் கற்றல் போன்றன ஆரம்பகாலங்களில் குருகுலக் கல்வி, திண்ணைக்கல்வி மூலம் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் உருவான பாடசாலை கல்வி முறைமை, தொடர்ந்து மத்திய காலங்களில் அமைக்கப்பெற்ற பல்கலைக்கழக உயர் கல்வி முறைமை போன்ற சனநாயக மற்றும் சமத்துவத்தின் சமூக நிறுவனங்களுக்கு துணை நிற்க நூலகங்கள் நிறுவப்பட்டன. இன்றைய அறிவுசார் தகவல் சமூகத்தில் காணப்படும் நூலகங்களாவன கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், பப்பிரஸ் போன்ற தொன்மையான தகவல் ஊடகங்ளைக் கடந்து காகித ஊடகம், அச்சு பதிப்பின் வருகை, இணைய நூலகம், மின்னிய, எண்ணிம நூலகம் (டிஜிட்டல் நூலகம்) போன்ற பல வளர்ச்சிப் படிநிலைகளை கடந்து வளர்ச்சியடைந்துள்ளன. நூலகமும் சமூகமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. தரவு மற்றும் தகவல் போன்றவற்றின் தேவையினை அதிகமாக உணரும் இன்றைய யுகத்தில் கல்வித்துறையில் மட்டுமன்றி சமூக செயற்பாடுகளோடும் நூலக தகவல் வளங்கள் நேரடியாக தொடர்புபட்டுள்ளன.

அறிவின் பிரவாகமானது பல பரிமாணங்களில் காணப்படுகின்றது. இந்த கட்டற்ற பெருக்கம், தகவல் பரிமாற்றம் நேரடியாக அறிவு வழங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளது, அறிவு புலங்களை தொடர்ச்சியாக வழங்குவது நூலகமாகும். இன்று நூலக தகவல் வள முறைமைகளின்றி புலமை நிலை ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நூலகங்கள் கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்பார்ப்புகளை மட்டுமன்றி சமூகத்தின் சிறுவர் முதல் முதியோர் வரை வாழ்நாள் முழுவதும் அனைவரதும் தகவல் தேவைகளையும் வழங்க வேண்டியுள்ளது. அதற்கான கடப்பாட்டினையும் கொண்டுள்ளது. ஆரம்பகாலத்தில் பொது மக்கள் பொழுது போக்குக்காகவும் தகவல் அறியவும், அறிவு பசியை போக்கவும் நூலகத்தினை பயன்படுத்தினர். இன்று தகவல் புரட்சி காரணமாக நேரடியாக நூலக கட்டிடத்திற்கு விஜயம் செய்யாமல் நூலக தேவைகளை பயன்படுத்தும் நிலை காணப்படுகிறது. இந்த பரிணாம வளர்ச்சியில் நூலகங்களும் தமது அறிவு வளங்களை பல பரிமாணங்களில் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்புதிய போக்கில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை சமூகத்திற்கு ஏற்றவகையில் பிரயோகிக்காவிட்டால் சமூகத்திற்கும், நூலகத்திற்குமான இடைவெளி அகலமானதாகவே காணப்படும்.

இதனை ஒன்றிணைப்பதே தற்போதுள்ள அறிவுசார், பன்முக வளர்ச்சி கொண்ட நூலகங்களின் கடமையாகும். இந்த யதார்த்தத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கான நடைமுறையினை ஆய்வு தகவல்கள் மூலம் அமைத்துக்கொள்ள வேண்டும். எமது நூலக ஆய்வுகள் சமூகத்தினை இணைப்பதாக அமைய வேண்டும்.

இன்று நாம் வாழும் சமூகம் தகவல் நிறைந்த, தகவல் தேவையுள்ள சமூகமாகும். இது இலத்திரனியல் தகவல் தொழிநுட்பம், கணினி தொழிநுட்பம், தொலைத் தொடர்பு தொழிநுட்பம், தொழில்பட வரைகலை தொழிநுட்பம் என பல பரிமாணங்களை கடந்து மேக கணிமை அல்லது கொளு கணிமை எனும் கிளவுட் தொழிநுட்பத்தை நோக்கி தகவல்கள் வளர்ச்சி பெற்றுள்ளது. தகவல் கண்டுபிடிப்பு, தகவல் சேகரிப்பு, தகவல் சேமிப்பு, தகவல் மீள்வழங்கள், தகவல் பகிர்வு, தகவல் பாதுகாப்பு, தகவல் சந்தை என பல தளங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

சமூக குழு நிலையில் வாசகர் வட்டம், நூலக வட்டம், கதை சொல்லும் நேரம், கண்காட்சி, கலாசார நிகழ்வு என்பன இன்று புலனம் (Whatapp), இண்ஸ்டாகிராம் (Instagram), என மாற்றம் பெற்று அதனூடாக தகவல்வள பகிர்வு ஏற்பட்டுள்ளது. விசேட தேவையுடையோர் கூட கட்புல, செவிப்புல தகவல் வளங்களால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இத் தகவல் புரட்சியினை புதிய மாற்றத்தினை சமூகம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்று சமூகத்தில் தகவல் புரட்சியானது தேசிய அபிவிருத்தி பொறிமுறைசார், நிதிசார் மற்றும் பொருள்சார் பிரதான புலமை உள்ளீடாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தகவல்தரம், நம்பகத் தன்மையிலும் வேறுபாடுகள் உருவாகியுள்ளன. பொய்யான தகவல்கள் உண்மையாக்கப்படுகின்றன. இதனை தரப்படுத்தலும், சரியானவற்றை சமூகத்திற்கு வழங்குதலும், நூலகரின் கடமையாக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த தகவல் பிரபஞ்சத்தில் தகவல் வள பகிர்வில் நமது சமூகத்தில் நூலகரான நாம்:

- புதுமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- நூலக தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பொது நூலக நூலகரை தயாரப்படுத்துவதோடு சமூகத்தையும் தயார்படுத்த வேண்டும்.
- சமூக வளர்ச்சியின் மையப்புள்ளியாக நவீன சேவைகளுடனான பொது நூலகங்களை நிறுவ வேண்டும்.
- பொது நூலக நூலகர்கள் சமூகத்துடன் நேரடி தொடர்புடையவர்கள் என்பதால் தம்மை நடைமுறைக்கு ஏற்றவாறு அபிவிருத்தி திறன்விருத்தியை, நவீன அறிவு விருத்தியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.



# கௌரவ அதிதியின் உரை

**கலாநிதி டபிளியு. ஜெ. ஜெயராஜ்**
பல்கலைக்கழக நூலகர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நூலகத்துறைக்குப் புத்துயிரளிக்கும் மனித மூலதன முதலீடு

இலங்கையின் வரலாற்றுத் தளங்களில் கடந்த 2021, 2022 ஆண்டு காலப் பகுதிகள் மிக முக்கியமாய் பதியப்பட வேண்டியவை. தவறான பொருளாதாரக் கோட்பாடுகள், பலவீனமான நிர்வாகக் கட்டமைப்பு, அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட பொருத்தமற்ற கொள்கைத் தெரிவுகள், கொவிட்-19 தொற்றுப் பரவல், உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு போன்ற வெளிப்புறத் தாக்கங்கள், நாட்டின் ஒவ்வோர் அங்கங்களையும் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளியதை மறக்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் வாழ்வின் எல்லைகளைத் தாண்டி வந்திருக்கிறோம்.

ஆயினும் உலகளாவிய ரீதியில், நிதி ஒருமைப்பாட்டை வளர்க்கவும், நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவும், சர்வதேச வர்த்தக வாய்ப்புக்களை எளிதாக்கவும், அதிக வேலைவாய்ப்புக்களை மேம்படுத்தவும், மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பவும், வறுமையைக் குறைக்கவுமென, 1944 ஆம் ஆண்டு, ஜுலையில் நிறுவப்பட்ட சர்வதேச நாணய நிதியமானது, இலங்கை, தனது அவல நிலையிலிருந்து நிமிர்ந்தெழ, கடந்த 2023ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 20ஆம் திகதியன்று இலங்கைக்கென அங்கீகரித்த 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியானது, வலுூட்டப்பட்ட பொருளாதார ஸ்திரத் தன்மையைக் கட்டியெழுப்பவும், மெதுமெதுவாக இலங்கையராய் நாம் மீண்டுவரவும் வழி சமைத்திருக்கிறது.

நாம் கடந்து வந்த பாதையில் கற்றுக் கொண்ட, சாதக, பாதக அனுபவப் பாடங்கள், நம்மீது திணிக்கப்பட்டிருப்பதை நாம் உணர்வுபூர்வமாக அறிந்திருக்கிறோம். 'மாறுகின்ற உலகில் மாறாத வலுவாக நிலைத்திருக்கக் கூடியது மனித மூலதன முதலீடு மாத்திரமே" என்பது நம்முள் விதைக்கப்பட்ட சத்தியமாய் இன்று வீரியம் பெற்றிருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் பௌதீக ரீதியில் கள நிலைமைகள் உருக்குலைகின்றபோது, உயிரியல் ரீதியில் பக்குவமாய் முதலீடு செய்யப்படும் 'மனித மூலதனத்தின்" அவசியப்பாடும், அவசரப்பாடும் ஒவ்வோர் நிறுவனங்களிலும் இன்று உணரப்பட்டுவருவது கண்கூடு. இது நூலகத்துறைக்கு விதிவிலக்கானதல்ல.

நிறுவனங்களின் பௌதிகரீதியிலான மூலதன முதலீட்டுக்கு நிகராக, எவ்வாறு தனிநபர்கள் தம்மைத்தாமே மூலதனங்களாக முதலீடு செய்யவேண்டுமென்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில், ஸ்கூல்ட்ஸ் மற்றும் பெக்கர் எனும் அறிஞர்களால், 1960 களில் அறிமுகப்படுத்தப்பட்ட 'மனித மூலதனக் கொள்கை“ (Human Capital Theory) யின் கருதுகோள் இன்று பல்வேறு கிளைபரப்பி வெற்றி கண்டுவருகிறது.

ஒரு நாட்டின் மனித வளங்களை ஆராய்ந்தறிந்து இனங்காண்பதும், அவ்வளங்களை ஆரோக்கியமாய் வளர்த்தெடுத்துத் தேசத்தின் அபிவிருத்திக்காய் பல்வேறு துறைகளிலும் சிறகடிக்க வைக்கத் தூண்டும் பாரிய பொறுப்பும், உத்தரவாதமும், நூலகத்துறையின்பால் விழுந்திருக்கும் உன்னத கடமையாகும். ஏனெனில் அறிவுசார் யுகமொன்றில் வாழும் சகலரும், ஏதோ ஒரு வகையிலும், அளவிலும் தத்தமக்குள் ஓர் அற்புத சக்தியைத் தக்க வைத்திருப்பதை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் அவ்வுன்னத திறனாற்றலை வெளிக்கொணர அவர்களுக்கான தளங்களை அடையாளப்படுத்த வேண்டியது, தகவல் அறிவுசார் நிலையங்களை நிர்வகிக்கும் நூலகத்துறையினரே என்பதை நாம் உணர வேண்டும்.

கற்றோர் முதல் பாமரர் வரை, அவரவர் தம்மை அடையாளப்படுத்தும் திறனாற்றலை வெளிக்காட்ட முடியாதபடி, இலைமறை காயாக இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தமது இருப்பை எவ்விதத் தடயங்களுமின்றித் தக்கவைத்திருப்பதையும், அவர்தம் வாழ்வியலை இறுதியில் பூச்சியத்துடன் முடிப்பதையும் காண்கின்றபோது, அம்மனித மூலதனப் பொக்கிஷங்கள் பயன்படாமலே அழிந்து போவது குறித்து நாம் அதிக கரிசனை செலுத்தவேண்டிய உச்சக்கட்டக் காலப்பகுதியில் நாம் நிற்கிறோம். தனி நபர்களுக்கும், அவர்களுக்கான வாய்ப்புக்களுக்கும் இடையிலுள்ள பெரும் இடைவெளியைக் குறைப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த பொறிமுறையாக, நூலகத்துறை தன்னை உயர்த்திக் காண்பிக்கவேண்டியது அவசியமாகும்.

நிதி மூலதனத்திற்கு எதிர்வினையாகப், பொருளாதார வல்லுனர்களால் தொடங்கப்பட்ட 'மனித மூலதன முதலீடு“ நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில், நூலகங்களை எவ்வாறு மீள் பொறியியல் நுட்பமுறைக்குள்ளாக்க முடியும்? என்பது நூலகத்துறை வல்லுனர்களால் கண்டறியப்படவேண்டும். எப்போதுமே 'பொருளாதார நெருக்கடியைச் சாக்காக வைத்து, நூலகத்துறை வாழாவிருப்பதையும், அதிலிருந்து தாம் மீளாதிருப்பதையும் எத்தனை காலங்களுக்கு நாம் தொடரப் போகிறோம்?

நூலகங்களும் அவற்றைச் சூழ்ந்திருக்கும் சமூகமும், எப்போது ஒரே புள்ளியில் இணைகின்றனவோ, அப்போதே ஒவ்வோர் தனி மனிதனின் அறிவுடைசார், திறன்சார், படைப்புசார், உணர்வுசார், அனுபவம்சார் வெளிப்பாடுகள் வீரியப்பட்டு நிற்பதும், மனிதரை மனிதராகவும், நல்லதோர் மூலதனமாகவும் உருவாக்கி, அழகு பார்ப்பதும் சாத்தியமாகும். இது ஒவ்வொரு தனிமனிதரையும் பெறுமதிமிக்க சொத்துக்களாகப் பிரித்தெடுத்து, நாட்டின் அபிவிருத்திப் பாதையில் அவ்வவ் இடங்களில் பிசிறில்லாதவகையில் பொருத்தி, நாட்டில் நெருக்கடிகளும், நெருக்குவாரங்களும் தலைதூக்குகின்றபோது, வெளிநாட்டு அமுக்கங்களேதுமின்றி, நூலகங்களால் பிரசவிக்கப்பட்ட இம்மனித மூலதனங்களின் முதலீட்டு வெளிப்பாடுகளை நாட்டு மக்கள் அனைவருமே மகிழ்வாய் ருசிக்க வாய்ப்பேற்படுத்துகிறது.

மனித மூலதன முதலீடுகளின் மூலம் நாடும், அதுசார் நற்சமூகமும், அதேவேளை அம்முதலீடுகளை உருவாக்கிய அறிவுசார் நூலகங்களும் சமாந்தரமாகப் பயணிப்பதைக் கண்கூடாகக் காண முடியும்.

ஆரோக்கியமான மனிதவள மூலதனங்களை நூலகங்களில் முதலீடு செய்கின்றபோது, அம்முதலீடுகளின் திறனாற்றல், ஆளுமை, முதிர்ச்சி போன்றவையானது, நூலகங்களில் மேம்பட்ட செயற்றிறன், ஏனைய நிறுவனங்களுடன் போட்டிபோடக்கூடிய தகுதி, நூலக ஊழியர் ஈடுபாடு, அடுத்தகட்ட நகர்வுத் திட்டமிடல், பொருத்தப்பாட்டுத் தன்மை, நெருக்குவாரங்களின்போதான மீள் எழுகை, புதுமை மற்றும் படைப்பாற்றல், நூலக நிறுவனப் பண்பாடு மற்றும் உறுதிப்பாடு, ஏனைய நிறுவனங்கள் மத்தியில் புகழாரம், சந்தையில் தாய் நிறுவன முத்திரை காப்பாற்றப்படல் ஆகியவை பெருமையாய் வெளிப்பட்டு நிற்பதற்கு அடித்தளமாகின்றது.

சமூக நிலைசார்ந்து 'மனித மூலதன முதலீட்டு" வெளிப்பாடுகளை அவதானிக்கின்ற போது, இதுவரை தனி நபர்களிடையே காணப்பட்ட மனப்பாங்குகளில் பாரிய முன்னேற்றம், கற்றலுக்கான தாகம், தேடலுக்கான தீவிரம், நாட்டின் தேவைக்கெனத் தன்னைத் தானே பொருத்திப் பார்த்தல், புரிந்துணர்வு, சவால்களைச் சமாளிக்கும் தந்திரோபாயங்கள், சூழ்நிலைக்கேற்ற நெகிழ்ச்சித் தன்மை. ஏனையோருடனும் இணைந்து குழு உணர்வுத் தூண்டல், தலைமைத்துவப் பண்புகளின் அடையாளங்கள், பிரச்சினை தீர்க்கும் பக்குவத்தன்மை என இதுவரை காலமும் காணாமல் போயிருந்த அத்தனை திறன்களும், ஆற்றல்களும் அவர்களிடமிருந்து வீரியத்துடன் வெளிக்கிளம்பி வருவதைப் படிப்படியாக நாம் உணரமுடியும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பதினேழு 'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்" (Sustainable Development Goals) முழுக்க முழுக்கச் சமூகம் சார்ந்து, மனித மூலதன முதலீடுகளை முன்னிலைப்படுத்தி, நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கினை அடையும் நுட்பமுறைகளையே மையப்படுத்துவதுடன், சகல நிறுவனங்களையும் அதன்பால் ஊக்குவிக்கிறது. ஆகவே தகவல் அறிவுசார் நிலையங்களாய், நாட்டின்பால் பற்றுக்கொண்ட மனிதவள முதலீடுகளை உருவாக்குவதில், இந் 'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின்" நோக்கங்களை நூலகங்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்திருப்பது ஓர் ஆரோக்கியமான அம்சமாகிறது.

மனிதனை மனிதனாக உருவாக்குவது மட்டுமல்ல, அவனுக்குள் ஒரு தனி மனித சுய செயற்றிறனை வரவழைக்க வைப்பதும், நூலகங்களின் உத்தரவாதமாகிறது. ஏனெனில் எந்தவொரு நாட்டிலும், எதற்கும் மற்றவரில் தங்கியிருப்பதும், முன் முனைவதற்கான உத்திகளைக் கையாள்வதில் தயக்கம் காட்டுவதும் அந்நாட்டின் சாபக்கேடாகப் பதியப்படுவதற்கான ஆபத்துக்களும் உண்டு.

நாடு வளம் பெற, நாட்டின் அபிவிருத்தி மேலோங்க, மனித மூலதனம் முதலீடு செய்யப்படுவதை நூலகர்கள் உறுதி செய்ய வேண்டும். வீழ்கின்ற சமூகம் இம் மனித முதலீடு கொண்டு, மீண்டும் வீரியம் பெற்று எழ வேண்டும். அதுதான் ஒரு நாட்டின் தர நிர்ணயத்தை உச்சத்திற்குக் கொண்டு செல்லும் ஆயுதமாகும்.

இலங்கையராய், அதிலும் குறிப்பாக நூலகத் துறையினராய், நாடே பெருமைப்படும் வகையில் நம்மையும் வடிவமைத்து, நாம் சார்ந்த சமூகத்தினரையும் வனைந்தெடுத்து, அபிவிருத்திப் பாதையில் கம்பீரமாய் பயணிப்போம். ஒவ்வொரு தனி மனிதனும், மனித மூலதனங்களாய்த் தம்மை முதலீடு செய்ய, சமூகத்தினரிடையே ஊடுருவுவோம். அவர்களை உருமாற்றுவோம். இவ்வாறு செய்வோமேயாகில், நம் தேசம் சுபீட்சம் பெறுவது அதிக தூரத்தில் இல்லை.



# கௌரவ அதிதியின் உரை

**திரு. நாகராசா மணிவண்ணன்**
உள்ளூராட்சி ஆணையாளர்
உள்ளூராட்சி திணைக்களம், கிழக்கு மாகாணம்

## உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பொது நூலக சேவைகள்

அவையில் வீற்றிருக்கும் சான்றோர்களே, கல்வி மான்களே, வாசகர்களே, எனதருமை அன்பர்களே! உங்கள் அனைவரையும் பணிந்தவனாக எனது அன்பார்ந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேசிய நூலக மற்றும் தகவல் அறிவியல் தொடர்பான தேசிய மாநாட்டிலே உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பொது நூலக சேவைகள் தொடர்பாக உங்கள் முன் உரையாற்ற கிடைத்த இவ் மதிப்புமிக்க தருணத்திற்கு முதற்கண் ஏற்பாட்டாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான பெறுமதி மிக்க ஒரு நிகழ்விலே உரையாற்றக் கிடைத்தமையையிட்டு பெருமைப்படுகின்றேன். பொது நூலகங்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால சவால்கள் குறித்து சிந்திக்க நாம் அனைவரும் அழைக்கப்படும் போது, வேகமாக மாறிவரும் நமது உலகின் சிக்கல்களை எதிர்கொள்வதும், இந்த விலைமதிப்பற்ற நூலகங்களின் தொடர்ச்சியான பொருத்தத்தையும் உயிர்த்துடிப்பினையும் உறுதி செய்யும் வகையில் ஒரு முன்னோக்கிய பாதையை வகுப்பதும் காலத்தின் கட்டாயமானதாகும் என்பதோடு எம் அனைவரின் பொறுப்புமாகும்.

பொது நூலகங்கள் நீண்ட காலமாக அறிவின் சரணாலயங்களாவும், கற்றலின் கோட்டைகளாகவும் சமூக ஈடுபாட்டின் கலங்கரை விளக்கங்களாகவும் மதிக்கப்படுகின்றன. அது மட்டுமன்றி அவை சமத்துவத்தின் அடிப்படை இடங்களாகவும் செயல்படுகின்றன. அங்கு அனைத்து தரப்பு தனிநபர்களும் வளங்களின் செல்வத்தை அணுகவும், அறிவார்ந்த பயன்களை தேடிக்கொள்ளவும், தங்கள் சக மனிதர்களுடன் இணைக்கவும் ஒரு பாலமாக நூலகங்கள் செயற்படுகின்றன. இதனாலேயே இவ் நூலகங்களை சமத்துவத்தின் அடிப்படைத் தளமாக நாம் அதனைப் பார்க்கின்றோம் எவ்வாறெனினும் 21ம் நூற்றாண்டின் சிக்கல்களின் வாயில் ஊடாக நோக்கும் போது பொது நூலகங்கள் எண்ணற்ற

சவால்களை எதிர்கொள்கின்றன என்றால் அது மிகையில்லை என்தோடு பயனாளர்களின் பங்களிப்பு என்பதும் தற்போது பெரும் சவாலான ஒன்றாக மாறி வருகின்றமையையும் நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் இச் சவால்கள் நமது அவசர அவதானத்தையும் எமது கூட்டு நடவடிக்கைகளையும் வேண்டி நிற்கின்றன என்பதும் வெள்ளிடை மலை.

அந்த வகையில் முதலாவதாக, பொது நூலகங்களில் காணப்படும் டிஜிட்டல் இடைவெளியை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். தொழிநுட்பம் ஆதிக்கம் செலுத்தும் ஒரு யுகத்தில் இணையத்திற்கான அணுகல் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு திறன்கள் இனி ஆடம்பரமானவை அல்ல என்பதோடு அத்தியவசிமானவையாகுவதோடு, தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகவும் அவை விளங்குவதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.  ஆயினும் கூட இணைய இணைப்பு மற்றும் தொழிநுட்ப தேர்ச்சி ஆகியவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இன்னும் எமது பொது நூலகங்களிலே நீடிக்கவே செய்கின்றன. இது ஓரங்கட்டப்பட்ட சமூகங்களை விகிதாசாரமாக பாதிப்பது மட்டுமல்லாது இருக்கும் சமத்தவமின்மைகளை மேலும் அதிகரிக்கின்றது. தகவலுக்கான சமமான அணுகலின் மேற்பார்வையாளர் என்ற வகையில் வலுவாக டிஜிட்டல் உள்கட்டமைப்பு, விரிவான பயிற்சித் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் உருமாறும் சக்தியைப் பயன்படுத்த அனைத்து தனிதபர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் இலக்கு கொண்ட அவுட்ரீச் முன்முயற்சிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் இந்த இடைவெளியைக் குறைக்கலாம் என்பதோடு இவற்றை நடைமுறைப்படுத்த நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம்.

அடுத்ததாக பொதுவாக நிதி கட்டுப்பாடுகள் பொது நூலக சேவைகளின் நிலைத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க தடையாக உள்ள மற்றொரு காரணியாகும்.  நிதி சிக்கன நடவடிக்கைகள் மற்றும் போட்டி வரவுசெலவு முன்னுரிமைகளின் ஓர் சகாப்தத்தில் பொது நூலகங்கள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் நிச்சயமற்ற நிதி நீரோடைகளுடன் போராடுவதைக் காணக்கூடியதாக உள்ளன. ஆயினும் கூட நூலக சேவைகளுக்கான தேவை தொடர்ந்து வளர்ந்து வருகிற அதே வேளை அவற்றை நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்களின் கிடைப்பனவோ அருகிக் கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இது எப்போதும் விரிவடைந்து வரும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதில் பொது நூலங்களுக்கு பெரும் சவாலக உள்ளதோடு தேசிய மட்டங்களில் பொது நூலகங்களில் முதலீட்டை அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுத்தல் வேணடும் என்ற உந்து சக்தியையும் என் ஒவ்வொருவருக்கும் வழங்குகின்றது.

கல்வியறிவானது வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் அதிலுள்ள ஈடுபாட்டை ஊக்குவிப்பதில் அவற்றின் இன்றியமையாத பங்கை வலியுறுத்தல் போன்றவற்றில் முக்கிய பங்காற்ற வேண்டும். இவற்றை நாம் வெற்றி கொள்வதற்கும் தேவையின் இலக்குகளை நிவர்த்தி செய்வதற்கும் நாம் மாற்று நிதி மூலங்களின் கிடைப்பனவுகள் பற்றி ஆராய வேண்டும் என்பதோடு வேறு நிதி மூலங்களை அடையாளம் கண்டு அதனைக் கொண்டு பொது நூலகத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்பதோடு தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகவும் காணப்படுகின்றது. மேலும் நமது பொது நூலகங்களின் பணி மற்றும் அதன் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க தேவையான நிதி ஆதாரங்களைப் பாதுகாக்க வாதிடும் திறனை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

மேலும் பெருகிய முறையில் சிக்கலான தகவல் நிலப்பரப்பில் நாம் பயணிக்கும் போது பொது நூலகங்கள் அவற்றின் பயனாளர்களின் வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே அதன் சேவைப் பரப்பினையும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இதற்கு புத்தாக்கத்தை தழுவுதல், புதிய சேவை மாதிரிகளை ஆராய்தல், பயனர் அனுபவம் மற்றும் நூலக சேவைகளின் பொருத்தத்தை மேம்படுத்த, வளர்ந்து வரும் தொழிநுட்பங்களைப் பயன்படுத்துதல் தவிர்க்க முடியாத காலத்தின் தேவைப்பாடாகும். சேகரிப்புக்களின் டிஜிட்டல் மயமாக்கல் ஊடாகவும் கற்றல் இடங்களின் வளர்ச்சி அல்லது மெய்நிகர் நிரலாக்கத்தின் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் 21ம் நூற்றாண்டின் நூலக பயனரின் மாறிவரும் கோரிக்கைகளுக்கு அமைய நம்மை நாம் மாற்றியமைக்க வேண்டும். எங்கள் நூலகங்கள் துடிப்பானதாகவும் மாறும் மற்றும் பதிலளிக்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேணடியதும் எனது மற்றும் உங்கள் அனைவரினதும் பொறுப்புமாகும்.

மேலும் பொது நூலகங்கள் நமது சமூகங்களின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் வரவேற்கத்தக்க மற்றும் உள்ளடக்கமான சூழல்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இது ஓரங்கட்டப்பட்ட மக்களுடன் தீவிரமாக ஈடுபடுதல், அணுகலுக்கான முறையான தடைகளை நிவர்த்தி செய்தல், நூலக சேகரிப்புக்கள் மற்றும் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அனுபவங்களை பிரதிபலிப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியததாக அமைதல் வேண்டும்.

உள்ளடக்கம் மற்றும் சொந்தமான ஒரு நெறிமுறையை வளர்ப்பதன் மூலம் பொது நூலகங்கள் இனம், மதம், பாலினம் மற்றும் சமூக பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் சேவை செய்யும் ஜனநாயக நிறுவனங்காக தாங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

முடிவில் பொது நூலகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் வலிமையானவை என்றாலும் அர்ப்பணிப்பு, படைப்பாற்றல் மற்றும் பின்னடைவுகளை ஒன்றிணைத்து செயல்படுவதன் மூலம் அவற்றை சமாளிக்க முடியும் என்று நான் நம்புகின்றேன். பொது நூலக இயக்கத்தின் இதயத்தில் உள்ள அணுகல், சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் மதிப்பிற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம். எதிர்காலத்தின் சாத்தியக்கூறுகளை நம்பிக்கை யுடனும் உறுதியுடனும் தழுவுவோம். இன்று நாம் செய்யும் பணி வரவிருக்கும் தலைமுறைகளுக்கான பொது நூலக சேவையின் வரையறைகளை தகர்த்து வானமே எல்லை என்னும் அளவில் அறிவினை வளர்க்க உதவும் பிரதான ஓர் தளமாக இப் பொது நூலகங்களை உருவாக்குவதோடு, நடைமுறை உலகின் சவால்களை வெற்றி கொண்டு மிளிரக் கூடிய ஓர் அறிவுச் சாளரமாக எமது பொது நூலகங்களை உயர்த்த நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம் என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி பராட்டி அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.



## Message from the Guest of Honour

**Dr. U. L. Abdul Majeed**
Dean,
Faculty of Technology, South Eastern University of Sri Lanka

### Embracing the Convergence: The Emergence of Library and Information Science

In the ever-evolving landscape of knowledge management and information dissemination, the convergence of Library Science and Information Science has led to the emergence of a cohesive and interdisciplinary field known as Library & Information Science (LIS). This comprehensive integration represents a transformative shift in how we perceive, organize, and utilize information in the digital age. This integration has unfolded and have many implications for the field it self.

Library Science and Information Science have distinct yet interconnected origins. Library Science, dating back to ancient civilizations, primarily focused on the organization, preservation, and dissemination of physical collections within libraries. Librarians were entrusted with the noble task of cataloging, preserving, and providing access to these precious collections. Meanwhile, Information Science emerged as a response to the digital revolution, emphasizing the management, retrieval, and analysis of information in various formats, including digital and multimedia. Information Science drew from disciplines such as computer science, mathematics, and communication theory to develop methods and tools for information organization, retrieval, and dissemination.

However, the advent of digital technologies blurred the boundaries between physical and digital collections, necessitating a fundamental shift in the roles as they have catalyzed the integration of Library Science and Information Science. With the rise of the internet, digital databases, and electronic resources, the boundaries between physical and digital collections blurred. Librarians and information professionals faced the challenge of adapting traditional practices to manage and provide access to digital resources effectively.

In fact, the integration of Library Science and Information Science redefined the roles of information professionals. Today's librarians are not only custodians of physical collections but also information managers, metadata specialists, and technology experts. They play pivotal roles in organizing, preserving, and disseminating information across various platforms and formats.

Library and Information Science thrives on its interdisciplinary nature, drawing insights from fields such as computer science, psychology, sociology, and communication. This interdisciplinary approach equips professionals with diverse perspectives and methodologies to tackle complex information challenges in the digital age.

A hallmark of LIS is its emphasis on user-centered services. Information professionals strive to understand the information needs and behaviors of diverse user groups and tailor services and resources accordingly. From designing intuitive interfaces to implementing personalized recommendation systems, the focus remains on enhancing the user experience.

The digital environment presents unique challenges for preserving and curating information over the long term. LIS professionals are at the forefront of efforts to develop standards, best practices, and technologies for digital preservation and curation. They ensure that valuable digital resources are archived, accessible, and usable for future generations.

On the other hand, the integration of Library Science and Information Science raises ethical and legal considerations related to information access, privacy, intellectual property, and censorship. LIS professionals must navigate these complex issues while upholding professional ethics and advocating for intellectual freedom and equitable access to information.

In conclusion, the integration of Library Science and Information Science into Library and Information Science represents a transformative shift in the information profession. This convergence has expanded the scope, relevance, and impact of information professionals in the digital age. As LIS continues to evolve, it remains committed to the principles of access, equity, and intellectual freedom, ensuring that information remains a cornerstone of democratic societies worldwide.

# Technical Session

# பாடசாலை நூலக கற்றல்வள நிலையத்தினை உயர்தர மாணவர்கள் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்

**இரத்தினகுமார் குபேசன்[1], விஜயயாழினி ரவீந்திரன்[2]**

[1]சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்பல்கலைக்கழகம், [2]ஆசிரிய நூலகர், காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

*kupeshan@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

உயர்தர மாணவர்கள் கற்றலில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். உயர்தர மாணவர்கள் பாடசாலை நூலகக் கற்றல்வள நிலையத்தினை இன்று அதிக விருப்புடன் பயன்படுத்தி சுயகற்றலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக பரீட்சைமையக் கல்விக்கே முன்உரிமை கொடுத்துள்ளனர். இதனால் பாடசாலை நூலக கற்றல்வள நிலையத்தினைப் பயன்படுத்துவதில் இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றமையைக் காணமுடிகின்றது. பாடசாலை நூலகக் கற்றல்வள நிலையம் தொடர்பாகப் பல்வேறு காலங்களில் பல ஆய்வாளர்களால் ஆய்வுகள் முன்னெடுத்து வந்தபோதிலும் ஆய்வாளர்களின் ஆய்வியல் கா.பொ.த. உயர்தர மாணவர்களின் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையத்தினைப் பயன்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளவில்லை. குறித்த இடைவெளியை மையமாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி ஆய்வானது வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள தெல்லிப்பளைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ஐந்து 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு 5376 மாணவர்களில் 247 கா.பொ.த. உயர்தர மாணவர்களை கிரேசிமோகனின்-1970 மாதிரிகளின் அடிப்படையில் தெரிவுசெய்து ஆய்வுக்கருவியாக வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆசிரியநூலகர்கள் ஐவரிடம் நேர்காணல் மூலமும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வு கலப்புமுறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கா.பொ.த உயர்தர மாணவர்கள் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையத்தினை பயன்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகப் பாடசாலை முகாமைத்துவம் சார்காரணிகள், ஆசிரியர்சார் செயற்பாடுகள், மாணவர்களுக்குத் தேவையான கற்றல்வளங்கள், மாணவர் சுயகற்றல் ஆர்வம் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டது. இக்காரணிகளுள் மாணவர்கள் கற்றல்வள நிலையங்களை பயன்படுத்துவதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவம்சார் காரணியில் உள்ள மாணவர்கள் விரும்பும் வகையில் நூலகம் அமையவில்லை என

(50%) (No-123) மாணவர்களும், மாணவர்களின் வாசிப்பினை மேம்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என 69% (No-170) மாணவர்களும், ஓய்வு நேரத்தினை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு பாடசாலையில் சந்தர்ப்பம் வழங்கவில்லை என 53% (No- 131) மாணவர்களும் பாடசாலை முகாமைத்துவத்தின் ஒத்துழைப்பின்மையை சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பாடசாலை முகாமைத்துவம் சார் காரணிகளின் பியர்சரின் இணைவுக்குணகமும் மெலிதான நேர்தொடர்புடன் ($r(247)=1.599, p<0.001$) என்றவாறு கண்டறியப்பட்டுள்ளது.

அந்தவகையில் பாடசாலை நூலகத்தினை மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் கவர்ச்சிகரமாகவும் நேர்த்தியுடனும் நூலகங்களை வடிவமைத்தல், மாணவர்களின் வாசிப்பினையும் சுயகற்றலையும் மேம்படுத்தவதற்கான வழிமுறைகளினை முன்னெடுத்தல் வாசகர் வட்டங்களை உருவாக்குதல், வகுப்பறை நூலகங்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க பாடசாலை முகாமைத்துவம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** பாடசாலை கற்றல்வள நிலையம், பாடசாலை நூலகம், கா.பொ.த. உயர்தர மாணவர்கள், வாசிப்புப் பழக்கம்

# Effect of Motivation on Job Satisfaction of Teacher Librarians in Government Schools in Sri Lanka: Special Reference to Vavuniya District

**S. Shanmugathasan**
Senior Asst. Librarian, University of Vavuniya

*shan@vau.ac.lk*

**ABSTRACT**

Motivation refers to the forces within a person that affect his direction, control or explain the behaviour of human beings. Employees' job satisfaction is indispensable to perform their duties effectively. The main objective was to find out the level of job satisfaction of teacher librarians of Government Schools in Vavuniya district of Sri Lanka with regard to the working condition, compensation, recognition, promotional opportunity along with demographic factors. The study was conducted by using a survey, and data was collected using a pretested questionnaire. The data was analyzed using SPSS statistical package. The total population was 205 teacher librarians, and 100 teacher librarians were selected as sample by the adoption of random sampling method. The response rate was 97%. The findings indicated that out of four independent variables; working condition and compensation are associated with dissatisfaction, recognition was related with low level satisfaction, and promotional opportunity mostly related to dissatisfaction condition. Aspects like demographic factors such as; age, gender, marital status and qualification showed a significant relationship to job satisfaction. It was concluded that the teacher librarians are dissatisfied with the facilities provided within the schools and career prospects. However, results showed that 72% of respondents are delighted to work in the libraries as they feel, they can gain more knowledge from the library. Therefore, it was recommended to enhance the facilities of working environment with basic technological facilities, fair compensation and promotional policies by the Ministry of Education. Policies should be revised to confirm that, they are equitable, to provide more opportunities for career advancement by organizing training and professional development programs.

**Keywords:** Motivation, Job satisfaction, Work condition, Compensation, Recognition, Promotional opportunity.

# பாரம்பரியங்களையும் முதுசங்களையும் பாதுகாப்பது அரும்பொருட்சாலை: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாச்சார அரும்பொருட்சாலையினை அடிப்படையாகக் கொண்ட நேர்வுநிலை ஆய்வு

**எஸ். எம். பயாஸ்[1], ஞா. விஜித்சரண்யா[2], உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[3]**
[1]இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
[2]வரலாற்றுத் துறை, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும்
[3]நூலக தகவல் உதவியாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*smfayas2002@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

நாளாந்தம் பயன்படுத்திய அரிய மற்றும் அருகிய தொல்பொருட்களை தன்னகத்தே சேமித்து வைக்கும் பட்டயமே அரும்பொருட்சாலையாகும். ஒரு இனத்தின் பாரம்பரியமும் முதுசங்களும் அவ்வினத்தின் பெருமை பாடத்தக்க சொத்தாகும். இந்நாட்டின் வரலாற்றோடு இரண்டறக் கலந்து, கடந்த பல நூற்றாண்டுகளாக இந்நாட்டின் முக்கிய ஒரு சமுதாயமாக வாழ்ந்து வரும் இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியத்தையும் தொன்மைகளையும் பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிடின் இலங்கை முஸ்லிம்கள் மிக விரைவில் அவர்களது மூதாதையர்களின் மிகக் காத்திரமான கல்வி, கலாச்சார, பண்பாட்டுப் பங்களிப்பினை பிரதிபலிக்கும் பெரும் முதுசங்களை இழந்துவிடுவார்கள். இப் பின்னணியில் இவ்வாய்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாச்சார அரும்பொருட்சாலையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரும்பொருள் மூலங்களை ஆவணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்புசார் ஆய்வு வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்நேர்வுநிலை ஆய்வானது நேரடியாக கள ஆய்வினூடாக பெறப்பட்ட அவதானக் குறிப்புகள், புகைப்பட ஆய்வினூடாக (Photographic Study) பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளை பகுப்பாய்வுக்குட்படுத்தியுள்ளதோடு, நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையவழித் தகவல்கள் மற்றும் ஆவணப் பதிவுகள் போன்ற இரண்டாம் நிலை தரவுகளைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் கிழக்கிலங்கையின் அம்பாறை பிரதேசத்தின் பிரதிபலிப்பாகக் காணப்படும் இவ்வரும்பொருட்சாலை சமய, சமூக, பொருளாதார மற்றும் கலாார அம்சங்களோடு அக்காலத்து வாழ்வியலைக் கருவாகக் கொண்டு விளங்குகின்றதென அறியகூடியதாக உள்ளது. இவ் அரும்பொருட்சாலையில் காணப்படும் சுமார் 950க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் (Artifacts) நான்கு வகையான தலைப்புகளின் கீழ் பகுப்பாக்கப்பட்டுள்ளன.

அவைகளில் 18% ஓலைச்சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும் ஏனைய ஆவணங்களாகவும். 61% வீட்டுப்பாவனைப் பொருட்களாகவும். 11% ஆடைகளும் அணிகலன்களாகவும், மற்றும் 10% மரபுவழிவந்த தொழில்சார் உபகரணங்களாகவும் காணப்படுகின்றன. மறைந்தும், மறந்தும் போய்க் கொண்டிருக்கும் புராதன சின்னங்களை இளைய சமூகத்தினர் அறியும்போது அவர்கள் மேற்கொண்டு செல்லும் பாதைகளை தெளிவாகப் புரிந்து கொள்ள இவ்வாய்வானது வழிகோலுவதோடு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலாசார அரும்பொருட்சாலைக்கானதோர் ஆவணமாவதுடன், அரும்பொருட்சாலை தொடர்பான ஆய்வில் ஈடுபடுபவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமையவல்லது.

**திறவுச் சொற்கள்:** அரும்பொருட்சாலை, இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஆவணங்கள், கலாசாரம்

# நூலகங்களில் பொருத்தமான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பேணுகை முறைகளை ஆராய்தல்

**காயத்திரி நவீரதன்**
சிரேஷ்ட உதவி நூலகர், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

*gayathirin@esn.ac.lk*

**ஆய்வுச்சுருக்கம்**

நூலகமொன்றில் சிறப்பான தரம் வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கு நூலகத் தகவல் வளங்களின் பாதுகாப்பு, பேணுகையானது இன்றியமையாததாகும். நூலகத் தகவல் வளங்களும் உபகரணங்களும் வினைத்திறனான பயன்பாட்டிற்காக சிறப்பாகப் பேணப்படுவதற்கு பொருத்தமான முறைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும். நூலக வளங்களில் பல்வேறுபட்ட அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத ஆவணங்கள் பல்வேறு உள்ளக, வெளிக்காரணிகளால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. சூழற்காரணிகள், இரசாயனக்காரணிகள், உயிரியல்காரணிகள், மனிதக் காரணிகள், இடர் போன்றவற்றால் ஆவணங்கள் சிதைவடைகின்றன. இவ் ஆய்வின் நோக்கமானது எமது சூழலில் அமைந்துள்ள பொது மற்றும் பாடசாலை நூலகங்களில் எவ்வாறு பொருத்தமான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பேணுகை முறைகளை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிதலாகும். ஆய்வுக்காக அவதானிப்பு மற்றும் உசாத்துணை மூலங்கள் பயன்படுத்தப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் பல்வேறு உசாத்துணை மூலங்கள் ஆராயப்பட்டன. அவதானிப்பின்போது மட்டக்களப்பிலுள்ள ஒவ்வொரு நூலகமும் அதன் பேணுகைச் செயற்பாடுகளில் வேறுபட்டுக் காணப்பட்டது. பெரும்பாலானவற்றில் பொருத்தமான பாதுகாப்பு, பேணுகை முறைகள் செயற்படுத்தப்படவில்லை.

எனவே, பொருத்தமான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பேணுகை முறைகளை இந்நூலகங்களில் மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பல்வேறு வகையான பாதுகாப்பு பேணுகை முறைகள் காணப்பட்ட போதிலும் அவை யாவும் பொருளாதார ரீதியிலும் செலவு மிக்கதும் பக்கவிளைவுகளையும் கொண்டுள்ளனவும் ஆகும். எனவே, தகவல் வளங்கள் வாசகர்கள் மற்றும் நூலக ஊழியர்களின் பாதுகாப்பிற்கு ஏற்புடையவையாக சூழல் நேயக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் ஒன்றிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்வது வினைத்திறனானதாகும். பாதுகாப்பு பேணுகை முறைகளைத் திட்டமிடும்போது நூலகத்தின் சேகரிப்புகளின் நிலை, பேணுகைக்கான தேவைகளுக்கு ஏற்ப

தெளிவாகத் திட்டமிடப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். இத்திட்டமிடலில் நூலகக்கட்டிடத்தின் அமைவு, இடர்களுக்கான தயார்நிலை மற்றும் பதிலீடு, சூழல், சேகரிப்புகளின் தற்போதைய நிலை என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய பேணுகை செயற்பாடுகளில் தடுப்பு முறைகள் என்பவை ஒரு நூலகமானது குறிப்பிட்ட ஆவணங்களின் தேய்மானத்தை குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கு மேற்கொள்ளும் செயன்முறைகளாகும். எனவே, சிறந்தமுறையில் நூல்கள் மீள்பெறுகையின்போது தேய்மானம் அடைவதைத் தவிர்ப்பதற்காக பொருத்தமான வெப்பநிலை, ஈரப்பதன், ஒளி மற்றும் ஏனைய சூழல் நிலைகளை ஏற்றவாறு மாற்றுதல் வேண்டும். மட்டை கட்டுதல் ஒரு அடிப்படையான பேணுகை முறையாகும். இது அவசியமான பௌதீகப் பாதுகாப்பை வழங்கும். மட்டை கட்டுதல், மீள்மட்டை கட்டுதல் போன்ற அவசியமான செயற்பாடுகள் பேணுகை நிகழ்வுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். சேமிப்புத் தொழினுட்பங்கள் தற்காலிக அல்லது நிரந்தரமாக சேகரிப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய நுட்பங்கள் பௌதீகப் பாதுகாப்பை வழங்குகின்றது. அரிய வகை நூல்கள் அமிலமற்ற பொதி செய்தல் மூலம் பாதுகாககப்படலாம். நூல் திருத்தங்கள் நூல்களைப் பயன்படுத்தும் வகையில் சாதாரண படிமுறைகளிலிருந்து விரிவான செயற்பாடுகள் வரை மேற்கொள்ளப்படுகின்றது. இடர்க்கட்டுப்பாடு சேகரிப்புகளைப் பேணுவதற்கு இன்றியமையாததாகும். இடருக்கான திட்டமிடுதலில் சகல தரப்பு நூலக உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி அவசரசேவை ஆளணி, நிர்வாகிகள், முன்னோடிகள் போன்றோரும் ஏனையோரும் பங்களிக்க வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட சூழல் நிலைமைகளைப் பேணுதல், இயற்கையான பூச்சிகொல்லிகள் மூலம் கட்டுப்படுத்துதல் சிறப்பானதாகும். நப்தலின் உருண்டைகள், சிற்றனெல்லா எண்ணெய், வேப்பம் எண்ணெய், வேப்பிலைத்தூள் என்பன பரிர்துரைக்கக்கூடிய முறைகளாகும். பொருத்தமான சூழல் காரணிகளை வழங்குவதன் மூலமும் சிறந்த முறையில் ஆவணங்களைக் கையாளுதல் மற்றும் உரிய வேளையில் மட்டை கட்டுதல் போன்ற செயன்முறைகளினூடாக நூலகங்களில் தகவல் ஆவணங்களைப் பேண முடியும். எனவே, நூலகங்களில் பொருத்தமான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பேணுகை முறைகளை நூலக ஆவணங்களில் ஏற்படும் பாதிப்பினைப் பொறுத்து உரிய முறையில் பயன்படுத்தலாம். சூழல் நேயக்கட்டுப்பாட்டு முறைகள் சூழலுக்கும் மனிதர்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

**திறவுச் சொற்கள்:** பாதுகாப்பு, பேணுகை, சூழல் நோய், ஒருங்கிணைந்த கட்டுப்பாடு.

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு மாணவர்களின் ஆய்வுகளுக்கு பல்கலைக்கழக நூலகத்திலுள்ள மின்னணு வளங்களின் பயன்பாடு: கூட்டமைப்பு வளங்கள் தொடர்பான ஆய்வு

**உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[1], முஹம்மட் மஜீட் மஸ்ரூபா[2]**
நூலக தகவல் உதவியாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்[1]
சிரேஷ்ட உதவி நூலகர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்[2]

*ulmfowsh@seu.ac.lk*

## ஆய்வுச்சுருக்கம்

மின்னணு வளங்கள் அல்லது மின்-வளங்கள் என்பது மின்னணு முறையில் அணுகக்கூடிய டிஜிட்டல் வடிவத்தில் உள்ள சாதனங்களாகும். மின்-வளங்களின் உதாரணங்களாக மின்னணு இதழ்கள், மின்னணு புத்தகங்கள் (மின்புத்தகம்), வலைத்தளங்கள், மற்றும் புலமைசார் தரவுத்தளங்கள் போன்ற பல்வேறு டிஜிட்டல் வடிவங்களில் உள்ள வளங்களை எடுத்துக்காட்டலாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இலங்கையிலுள்ள கல்விசார் நூலகங்களுக்கு தேவையான புலமைசார் தரவுத் தளங்களை கூட்டமைப்பு முறை அடிப்படையில் (CONSORTIUM) சந்தா செய்து கொடுத்துள்ளது. இந்த நூலக கூட்டமைப்பு முறை Consortium of Sri Lanka Academic Libraries (CONSAL) என பெயரிடப்பட்டுள்ளது. பட்டப்பின்படிப்பு மணவர்கள் கூட்டமைப்பு புலமைசார் தரவுத்தளங்களை தங்களது ஆய்வுக்காக பாவிக்கின்ற விதத்தினை சில பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்விற்கு தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வணிக நிர்வாகத்தில் (MBA) பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் 2020/2021 மற்றும் 2021/2022 கல்வி ஆண்டுகளில் பயிலும் 45 மாணவர்களிடம் இருந்து வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவறி முறையில் MS Excel மற்றும் SPSS Version 23.0 போன்ற மென்பொருள்களின் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பதில் அளித்த மாணவர்களில் 70 வீதமானோர் மின்னணு வளங்கள் (availability) கிடைக்கின்றதாகவும், 60 வீதமானோர் அணுகல் (accessibility) வசதிகள் உள்ளன என்றும், 40 வீதமானோர் சவால்கள் மற்றும் தடைகளாக தொலைநிலை அணுகள், தொழிநுட்ப வசதிகள், இணைய வசதிகள் மற்றும் ஆளணி பற்றாக்குறைகள் போன்றவற்றை சுட்டிக்காட்டியுள்ளனர். ஆய்வின் இறுதியில் 70 வீதமான பட்டப்பின்படிப்பு மாணவர்கள் தங்களது ஆய்வுக்காக கூட்டமைப்பு புலமைசார் வளங்களை பயன்படுத்துகின்றனர் என்று கண்டறியப்பட்டது. பல்கலைக்கழக நூலகமானது இச்சேவையை தடையின்றி வழங்குவதற்குரிய பயிற்றப்பட்ட

பணியாளர்களை நூலகத்தில் நியமிக்க வேண்டும் என்றும், பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு போதியளவு பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்கு செய்து கூட்டமைப்பு மூலம் சந்தா செய்யப்பட்டுள்ள புலமைசார் தரவுத்தளங்களை பாவிப்பதற்கு வழிகாட்ட வேண்டும் என்றும், தொலைநிலை அணுகல் (remote access) வழங்குவதற்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மின்னஞ்சல் கணக்குகளை (SEU domain e-mail) மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

**திறவுச் சொற்கள்:** மின்னணு வளங்கள், தரவுத்தளங்கள், நூலக கூட்டமைப்பு, CONSAL

# கொவிட் காலத்தின் பின்னரான இளங்கலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கம்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு


**அசனார் அலியார் [1], சுலைமா லெப்பை முஹம்மட் சஜீர [2], இளையதம்பி அப்துல் ஹலீம் [3]**

[1] முதுகலை மாணவர், அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை, கலை பீடம், பேராதனை பல்கலைக்கழகம், [2] சிரேஷ்ட உதவி நூலகர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் [3] நூலக உதவியாளர், நூலகம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*aliyarbinasanar@gmail.com*



## ஆய்வுச்சுருக்கம்

வாசிப்பு மனிதர்களை செம்மைப்படுத்தும் எனும் வகையிலும் நூலகம் பல்கலைக்கழக மாணவர்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்றும் எனும் வகையிலும் அவை முக்கியத்துவம் பெறுகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தமட்டில் நூலகம் தனித்துறையாக செயற்பட்டுவருகின்றது. ஆனாலும் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதில் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துவருகின்றனர். இந்திலையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2021/2022 கல்வியாண்டில் கல்வி கற்கும் கலை மற்றும் கலாசார பீட மாணவர்களின் கொவிட் காலப் பின்னரான வாசிப்புப் பழக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அளவுசார் ஆய்வு வழிமுறையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக குறித்த ஆய்வுப் பிரதேசத்தைச் சேர்ந்த 1368 மாணவர்களில் 320 மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். அதில் 295 மாதிரிகளிடமிருந்து முதல்நிலைத் தரவுகளாக பூரணப்படுத்தப்பட்ட மூடிய வினாக்கொத்து (google form) மூலமும் அவர்களில் தெரிவுசெய்யப்பட்ட சிலரிடமிருந்து நேர்காணல் மூலமும் தகவல்கள் பெறப்பட்டு அவை SPSS 24.5 மற்றும் MS EXCEL ஆகிய மென்பொருட்கள் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளும் வாசிக்கப்பயன்படுத்தப்பட்டன. மொத்த மாணவர்களில் 287 மாணவர்கள் மாத்திரம் வாசிகசாலைப் பதிவை மேற்கொண்டிருப்பதுடன் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களில் முதலாம் வருட மாணவர்கள் மிக அதிகளவில் வாசிப்புப் பழக்கம் உடையவர்களாகவும் பொதுக்கற்கை மாணவர்களைப் பார்க்கிலும் விசேடக் கற்கை மாணவர்கள் அதிகளவில் வாசிப்பில் ஆர்வம்

கொண்டுள்ளவர்களாகவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவில் கொரேனா காலப்பகுதியில் மாணவர்களிடம் காணப்பட்ட வாசிப்புக்குத் தடையான பிரச்சினைகளான இலத்திரனியல் சாதனங்களின் மூலம் நீண்ட நேரம் வாசிக்க முடியாமை, தலைவலி ஏற்படுதல், சலிப்பு, நேரவிரயம் மற்றும் இலகுவில் மறந்துவிடல் போன்றன தீர்க்கப்பட்டு தற்பொது நூலகத்திற்கு சென்று அமைதியான இடத்தில் வாசித்தல், நேர முகாமைத்துவம், தேவையான புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளின் மூலம் அவர்களின் வாசிப்புப் பழக்கம் இயல்புநிலைக்கு திரும்பியுள்ளது. இந்நிலையை மேலும் ஊக்கப்படுத்தி தொடர்ந்தும் வாசிப்பு விருத்திக்கான திட்டங்களை வகுத்து, அதனை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தினால் வாசிப்பின் ஊடாக அடுத்துவரவிருக்கும் கல்விச் சமூகத்திற்கு சிறந்த முன்மாதிரிமிக்க ஆளுமைகளை உருவாக்கலாம்.

**திறவுச் சொற்கள்:** வாசிப்புப் பழக்கம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழம், கலை மற்றும் கலாசாரம். இளங்கலை மாணவர்கள்.

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்களும் இளமானிப்பட்ட மாணவர்களின் பாவனையும்: தென் கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட நூலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**சம்சுதீன் இன்பம்[1], முஹம்மட் மஜீட் மஸ்றூபா[2], எம்.சீ. நாபிலா[3]**
[1,3]நூலக தகவல் உதவியாளர், பிரயோக விஞ்ஞான பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், [2]சிரேஸ்ட உதவி நூலகர், பிரயோக விஞ்ஞான பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*impam@seu.ac.lk*

**ஆய்வுச்சுருக்கம்**

இளமானிப்பட்ட மாணவர்கள் தமது பரீட்சை பெறுபேறுகளை அதிகரிப்பதில் உயர்த்துவதில் நூலகத்திலுள்ள புத்தகங்களையும், ஆசிரியர்களின் குறிப்பேடுகளையும் கற்றாலும், கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்றன. அதாவது பரீட்சைக்கு இலகுவாகவும், விரைவாகவும் விடையளிக்க பயிற்றுவிக்கும் ஒரு ஆசானாகவும் இவை செயற்படுகின்றன. சென்ற Covid -19 காலத்தில் வீட்டை விட்டு வெளியில் நடமாட முடியாத, அடுத்த மனிதரை எதிர்கொள்ள இயலாத, ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கால விரயத்தைத் தவிர்க்கும் முகமாக மின்னியல் முறையில் விரிவுரைகளையும் பரீட்சைகளையும் நடாத்தினர். தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகங்கள் முடிந்தளவு மின்னியல் வளங்களை மாணவர்களுக்கு வழங்கின. அத்தோடு கடந்த கால வினாத்தாள்களை மாற்றத்துக்குட்படுத்துவது என பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய வன் தாள்களாக (hard copy) இருந்தவைகள் scanning செய்யப்பட்டு metadata மிகக்குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டது. 2015 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் இடம்பெற்ற அனைத்து பரீட்சைகளினதும் வினாத்தாள்கள் பிரயோக விஞ்ஞான பீடத்தின் மெய்நிகர் கற்றல் சூழல் (Virtual Learning Environment -VLE) பகுதியில் பதிவேற்றப்பட்டன. இவ்வினாத்தாள்களின் பாவனையையும், பயன்பாட்டு முறைகளையும் பரீட்சிப்பது இவ்வாய்வின் குறிக்கோளாகும். இதற்காக 2021 – 2023 வரையான காலப்பகுதியில் மெய்நிகர் கற்றல் சூழலிலிருந்து மாணவர்கள் பாவித்த முறைமைக்கான மெய்நிகர் கற்றல் சூழல் அறிக்கை பெறப்பட்டு ஆராயப்பட்டது. அறிக்கை தரவுகளின் படி 1568 மின்னியல் பரீட்சைத்தாள்களை மாணவர்கள் 59556 தடவைகள் பயன் படுத்தியுள்ளார்கள் என்று கண்டறியப்பட்டது. எனவே மேலும் சிறப்பான

வினைத்திறனான சேவையினை வழங்குவதற்கு குறித்த பகுதிக்கு அதிக திறமையுடைய ஒரு நூலக தகவல் விஞ்ஞான உதவியாளர் நியமிக்கப்படுவதுடன் வினைத்திறனுள்ள புதிய தொழிநுட்ப வசதிகள் கொண்ட இயந்திரங்கள் (scanner, computer, server) போன்றவை அவசியம் என்று இவ்வாய்வு சிபார்சு செய்கின்றது.

**திறவுச்சொற்கள்:** Covid - 19, மின்னியல் வளங்கள், வன் தாள்கள், மெய்நிகர் கற்றல் சூழல், டிஜிட்டல் பாதுகாப்பு.

# Identifying Imperative Aspects to Build Smart Library Services in Sri Lanka

**M. N. Thasneem**
Information Officer, National Science Foundation, Colombo

*thasneemmys@gmail.com*

**Abstract**

Smart Library Service is one of the important dimensions of the Smart Library which enlightens the contemporary modern society with the advancement of various emerging technologies such as Internet of Things (IoT), Artificial intelligence (AI), 5G, RFID, Machine Translation, Voice and Image Recognition, Natural Language Processing (NLP), Big Data, and Cloud Computing. The current generation has been habituated dramatically by smart technologies and always finding the ways to accompany their day-to-day tasks instantly, but in Sri Lanka, libraries are not capable of providing such kinds of services for them. The lack of interaction between users and libraries is one of the disquieting trends in the present situations. Institutional and political bodies of the smart governance should encourage the library community to advance their knowledge with up-to-date technologies for development by reevaluating libraries for the new smart surroundings. The main aim of this study was to identify the factors contributing to strengthening and promoting smart library services of the universities and Research and Development institutions. The National Science Foundation (NSF) of Sri Lanka is dedicated to promoting Science, Technology, and Innovation for the economic and social prosperity of Sri Lanka and exploring new avenues for collaboration and enriching the knowledge of the library community. During the past 3 years, NSF visited more than 30 libraries and arranged library awareness programs for more than 1000 academic and library staff. According to the participants' comments collected from the feedback forms, based on the discussion with library staff and the NSF trainers' observation, this study was conducted. The study confirms that due to rapidly changing high technologies and the advancing needs of smart people, libraries are attempting to enhance their services with smart technologies and seeking support from government authorities. It was identified that advanced training opportunities, lack of exposure visits, poor infrastructure facilities, and lack of

financial assistance are the main factors that influence establishing smart library services. Even though most of our libraries have smart users, these libraries are unable to meet their requirements. Further, analyzing the route of realizing smart services, knowledge transfer, manpower skills development, promoting human-machine interaction, combining technology, virtual conditions, and utilizing intelligent devices can be considered as other factors to implement smart library services in Sri Lanka. Hence, Sri Lanka is a developing country, it is a challenging task to promote libraries to the next level of development. This study recommends as the smart library solution not only advances productivity, but also enhances the overall academic and research experiences by providing a systematic approach for all library activities. For this purpose, at first, the responsible organizations need to identify the possible strategies by analyzing user requirements, recognizing and utilizing existing important physical and intellectual resources, and implementing policies are essential to anticipate positive developments towards smart library system.

**Keywords:** Emerging technologies, Internet of Things, Social Prosperity, Smart governance, Smart surroundings

# பாடசாலை நூலகச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் உள்ளக மேற்பார்வையின் முக்கியத்துவம்

**முகமட் உசனார் நவ்பர்காந்**

ஆசிரியர், மட்/ம.மே./ இருட்டுச்சோலைமடு விஷ்ணு வித்தியாலயம்

மட்டக்களப்பு மேற்கு வலயம்

*noufekhan@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

நிலைமாறும் உலகில் தினம் தினம் கண் இமைக்கும் பொழுதில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. மனிதனது அறிவாற்றல் விருத்தியும் மற்றவரை விட எந்தளவு புதிய விடயங்களை உள்வாங்கி இருக்கின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது. இன்றைய நூலகங்கள் பொதுவாகத் தகவல் மையங்களாகவே செயற்படுகின்றன. தகவல் தொடர்பாடலில் பல்வேறு நுட்பங்களை உள்வாங்கிக் கொண்டு தகவல் தேவைப்படும் நபருக்குத் தேவையான சரியான தகவலை சரியான நேரத்தில் வழங்க வேண்டிய அல்லது தகவலாளியை ஆற்றுப்படுத்தவேண்டிய முக்கியமான பணியில் ஈடுபட்டுள்ளன. அச்சிட்ட ஆவணங்கள் மாத்திரமின்றி அச்சிடப்படாத நூலுருவில் பெறாத சாதனங்களும் இன்றைய நூலகங்களை ஆக்கிரமித்துள்ளன. மனிதனின் அறிவுத்தேடலின் விளைவுகளே பெறுமதிமிக்க நூல்களைத் தேடிச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கும் இடங்களாக நூலகங்கள் மாறியுள்ளன. நூலகங்களில் புத்தக கணக்கெடுப்பிற்கு மாத்திரம் வருடா வருடம் புதுப்புது அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால் அவர்களால் நூலகச் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுவதில்லை. இவை ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக ஒழுங்கமைப்பதிலும் உள்ளக மேற்பார்வையை முன்னெடுப்பதிலும் சவாலாகவே அமைகின்றன. இதன்படி இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மத்தி வலயத்தின் ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள 18 பாடசாலைகளில் Álகங்கள் காணப்படும் 07 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஆய்விற்கான ஆய்வு மாதிரிகளாக அதிபர்கள் அனைவரும் பாடசாலை தெரிவு செய்யப்பட்டமைக்கமைவாகப் ஆய்வுக்குட்படுவதுடன், 8 பகுதித் தலைவர்களும், 7 நூலகப் பொறுப்பாளர்களும் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்கான தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணச்சான்றுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் தொகைசார் மற்றும் பண்புசார் அணுகுமறை பயன்படுத்தப்பட்டுள்ளதால்

இது அளவை நிலை ஆய்வாக உள்ளதுடன் ஆய்வு வடிவமாக கலப்பு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளின் ஊடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுவதுடன் பகுப்பாய்வின் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகளின் பிரகாரம் ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 70 சதவீதமான நூலகங்களில் உள்ளக மேற்பார்வையானது பெயரளவில் இடம்பெறுகின்றன. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80 சதவீதமான முடிவுகளில் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களே நூலகத்தை செயற்படுத்துகின்றதுடன், பாடசாலைகளில் நூலகங்களில் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகையில் புத்தக ஒழுங்கமைப்பு இன்மையும், நூலககச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதில் பொருத்தமான துறைசார் ஆளணிப் பற்றாக்குறை நிலவுதல் போன்ற முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலை நூலகத்தை வினைத்திறனாக்குவதற்கு உள்ளக மேற்பார்வை மூலம் நூலகச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், துறைசார்ந்தவர்களினை நூலகங்களிற்கு நூலகர்களை நியமித்தல், பகுதித் தலைவர்கள், வலயக் கல்வி அலுவலர்களைக் கொண்டு நூலகங்களினை மேற்பார்வை செய்தல், வலயக்கல்வி அலுவலகத்திடம் பாடசாலை நூலகத்தின் நிலைமையை எடுத்துக்கூறி அரசின் நிதி உதவியை நூலகத்திற்குப் பெற்று நூலகத்தை நவீன முறையில் விஸ்தரிக்க முயற்சித்தல் போன்ற வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** பாடசாலை நூலகங்கள், உள்ளக மேற்பார்வை, ஒழுங்கமைத்தல், முக்கியத்துவம்

# யாழ் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ் செய்திப்பத்திரிகைகளின் சேகரிப்பும் ஆவணப்படுத்தலும்

**தயாளினி, பி**
நூலக தகவல் உதவியாளர், யாழ்பல்கலைக்கழக நூலகம்

*pthaya3006@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

கல்வி சார் நூலகங்கள் அவற்றின் வாசகர்களின் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளிற்கான தகவல் வளங்களை வழங்குவதில் முதன்மை வகிக்கின்றன. பத்திரிகைகள் வாசகர்களுக்கான அரச கொள்கைகள், பொது விழிப்ணர்வு, அரசியல், விளையாட்டு, மற்றும் பல தகவல்களை உடனுக்குடன் வழங்குவதற்கான உண்மைக்கருவியாகக் காணப்படுகின்றன. யாழ் பல்கலைக்கழக நூலகமானது அச்சிடப்பட்ட செய்தித்தாள்களைப் ஆவணப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் பெரும் பங்காற்றுகின்றது. தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிப்பத்திரிகைகளை 1974 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்வதுடன் முன்னைய இதழ்களினையும் ஆவணப்படுத்தி வருகின்றது. இந்தக் கட்டுரை யாழ் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ் செய்தித் தாள்களின் முக்கியத்துவத்தினையும் இவற்றினை ஆவணப்படுத்துவதில் நூலகம் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவற்றினை செயற்படுத்துவதில் முகம் கொடுக்கும் சவால்களையும் விபரிக்கின்றது. யாழ்பல்கலைக்கழக நூலகத்தில் ஏறக்குறைய பதினேழு தமிழ் பத்திரகைகள் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் முக்கியமானவையாக இந்து சாதனம் (1909-1978), பாதுகாவலன் (1935-1970), சுதந்திரன் (1952-1978), ஈழகேசரி (1944-1953), ஈழநாடு (1961-2021), ஈழநாதம் (1990-1995), முரசொலி (1986-1990), தினபதி (1979-1985), வீரகேசரி (1983-2022), தினகரன் (1983-2024), தினக்குரல் (2001-2024) மற்றும் பல. நூலகமானது பத்திரிகைகளை மொழி ரீதியாக வேறுபடுத்தி ஒழுங்கமைத்துள்ளது. இவற்றில் ஒவ்வொரு மொழியிலும் தலைப்பு ரீதியாகவும் ஆண்டு ரீதியாகவும் ஒழுங்குபடுத்தியுள்ளது. ஒவ்வொரு பத்திரிகையும் ஆண்டு ரீதியாக கட்புல சுட்டியாக்கக் கையேடுகளில் பதியப்ப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் பத்திரிகைகள் ஆண்டு ரீதியாக முழு இதழ்களும் திகதி வாரியாக ஒழுங்படுக்கப்பட்டு பாதுகாப்பதற்கான உறுதியான பிணைப்பு முறையில் பாதுகாக்கப்படுகின்றது. மொத்த பத்திரிகை சேகரிப்பில் ஏறத்தாள 5% மட்டுமே உறுதியான அட்டைப்பாதுகாப்பு முறை மூலம் பாதுகாக்கப்படுகின்றன. பழமையான பத்திரிகைகளின் பௌதீக நிலை மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால்

அவற்றின் கையாழுகை மிகவும் சவாலானதாகக் காணப்படுகின்றது. அத்துடன் நூலகத்தின் பத்திரிகைப்பிரிவானது ஆண்டிற்கு சராசரியாக 30% ஆன மொத்த வாசகர்களைக் கவர்ந்துள்ளது. எதிர்கால சந்ததியினருக்கான சேகரிப்பை பாதுகாப்பதற்கும் ஆவணப்படுத்துவற்கும் மற்றும் எதிர்கால ஆராச்சியாளர்களின் தகவல் தேவையைப்பூர்த்தி செய்வதற்கும் நூலகம் மேற்கோள்ளக்கூடிய மூலோபாய செயற்றிட்டத்திற்கு சவாலாக அமையும் காரணிகளாக இடப்பற்றாக்குறை, சூழல் காரணிகள் (வெப்பநிலை, வெளிச்சம், ஈரப்பதன்), சேகரிப்புக்களிக் சிதைவு, மற்றும் சேகரிப்புக்களின் பாதுகாப்பு நிலைமைகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாய்வானது யாழ்பல்கலைக்கழக நூலகத்தின் பத்திரிகை சேகரிப்பின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தி அவற்றினை ஆணப்படுத்துவதிலுல் உள்ள சவால்களையும் இனங்கண்டுள்ளது. அத்துடன் இவ் அரிய சேகரிப்புக்களை ஆவணப்படுத்துவதற்கு எண்ணிமப்படுத்தல் முறையினை யாழ்பல்கலைக்கழக நூலகமானது ஆரம்பித்துள்ள போதிலும் இச்செயற்பாட்டினை விரைவுபடுத்தலையும் அரிய பத்திரிகைகளைப் பாதுகாப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேப்படுத்து தலையும் இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** யாழ்பல்கலைக் கழக நூலகம், தமிழ் பத்திரிகை சேகரிப்பு, ஆவணப்படுத்தல், பாதுகாத்தல்

# Reading Habits of Children Using Public Libraries in Jaffna District, Sri Lanka

**Sandaresee Sudusinghe[1] and Kalpana Chandrasekar[2]**
[1]Library, President Office, Colombo, and [2] Deputy Librarian, Library, University of Jaffna, Sri Lanka

*kchandrasekar@univ.jfn.ac.lk*

**Abstract**

Reading habit is one of the most essential elements of an individual's personal and intellectual development. If the habit of reading is inculcated in the childhood, it would help in enhancing knowledge, skills, imagination and creativity among children. The aim of the present study is to evaluate the reading habit of children utilizing public libraries in the Jaffna District, with the intension of enhancing the quality of services provided by the public libraries for children within the district. The descriptive survey research method was adopted. The participants were randomly selected from the list of active members (between the age group 3-14) of the public libraries (n=60) in the Jaffna District. At few instances, purposive sampling technique also employed. A self-administered structured questionnaire was distributed to the selected participants (n=458) ensuring the diversity in the participants pool, in relation to sex, age and locality. The Jaffna, Valikamam, Thenmaradchchi, Vadamaradchchi, and Islands area served as the study's base. The duly completed questionnaires received were analyzed quantitatively (using SPSS version 21) and qualitatively (using NVivo version 12). Out of 458 questionnaires distributed, 370 were returned, with the response rate of 80.78%. The study sample comprised 183 (49.5%) females and 187 (50.5%) males, within the age range of 3-14 years and covering entire geographical area of the Jaffna District. The findings revealed that 87.8% of the respondents prioritized reading as their leisure activity. Among the respondents, 94.6% expressed their interest in reading books, 54.3% preferred to spend 1-2 hours per day for reading. Further, the majority of the respondents expressed a preference for reading story books, in addition, showed interest in children's magazines and newspapers. Moreover, 59.5% of the respondents preferred reading materials in multiple formats. For the majority of respondents' favorite place for reading is home, followed by public libraries. The primary purpose for visiting the public libraries is borrowing library materials (66.8%), and searching

for required reading material carried out with the support of library catalogues, assistance from library staff, browsing through bookshelves, etc. Considering the accessibility, 93.8% of respondents live within 10 Km radius from a public library. With regard to library facilities for children in the public libraries of Jaffna, collection, shelf arrangement, lending and reference services, opening hours, library environment, and the staff assistance are not up to the level of users' expectation, which was measured by using 4-point Likert scale. Besides, more than 50% of the survey participants expressed satisfaction with the library programs. However, library programs such as storytelling, reading promotion and reader development, reading clubs, and language classes were rated poor. The study identified insufficient reading materials, language issues (e.g., lack of books in Tamil, level of English language proficiency), lack of time, overloaded with schoolwork, absence of a conducive reading environment, and lack of diversity in children's literature as major obstacles related to reading habits of children. The study suggests adopting a comprehensive approach to foster reading habits and literacy in children. This approach would include parental involvement, the establishment of libraries in rural regions, enhancing children's library resources and facilities, promoting reading through competitions, raising awareness about the importance of reading, reducing academic pressures such as tutoring, and allocating more time for leisurely and enjoyable reading. Implementing these measures could be instrumental in achieving the goal of this study.

**Keywords:** Children, Reading habits, Public libraries, Jaffna, Sri Lanka.

# கிழக்கு மாகாணத்திலுள்ள பொதுநூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் தற்போதைய நிலையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்

**லவண்யா ஜெகதீஸ்பரன்**
சிரேஷ்ட உதவி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்

*lavanyaj@esn.ac.lk*

**ஆய்வுச்சுருக்கம்**

பொது நூலகங்களில் மனித வள மூலதனமானது மிகவும் முக்கியமானதொன்றாக கருதப்படுகின்றது. நூலக வாசகர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதில் மனித வளம் இன்றியமையாத பங்கை வகிக்கிறது. இந்த ஆய்வானது கிழக்கு மாகாணத்திலுள்ள பொது நூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் தற்போதைய நிலையையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் கண்டறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் ஆய்வுப் பிரதேசத்தை சேர்ந்த நூலக ஊழியர்களின் கல்வித் தகைமை, திறன்கள், மற்றும் பொது நூலகங்களில் மனிதவள மூலதனத்துடன் தொடர்புடைய சவால்கள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. குறித்த ஆய்வுக்கான ஆய்வுக்குடித்தொகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள பொது நூலகங்களில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களும் உள்வாங்கப்பட்டனர் (n=424). இவ்வாய்வுக்கான வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு, ஆய்வுக் குடித் தொகைக்கு விநியோகிக்கப்பட்டு, அதன் மூலம் நூலகப் பணியாளர்களின் குடியியல் சார்ந்த தகவல்கள், கல்வித் தகைமை மற்றும் திறன்கள் சார்ந்த தகவல்கள், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான தகவல்கள் என்பன சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பெறுபேறுகள் அட்டவணைகள் மற்றும் வரைபடங்களை பயன்படுத்தி அறிக்கையிடப்பட்டுள்ளன. இவ்வாய்வில், 80.19 சதவீதமான நூலகப் பணியாளர்கள் (n=340) பங்குபற்றி இருந்தனர். இவ்வாய்வில் பங்குபற்றிய நூலக ஊழியர்களில் 57.9% க.பொ.த. உயர்தர கல்வித்தகைமையையும் (n=197), 37.4% க.பொ.த. சாதாரண தர கல்வித்தகைமையையும் (n=127) கொண்டிருந்தமையை அறியமுடிந்தது. மேலும், ஆய்வில் பங்குபற்றிய ஊழியர்களில் 60.3% சதவீதமானவர்கள் நூலக விஞ்ஞானத்தில் தொழில்சார் தகைமையைப் பெற்றிருந்தனர். ஆயினும் மிகக்குறைந்த எண்ணிக்கையினரே (9.9%, n= 33) இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்படும் நூலக விஞ்ஞானக் கற்கை நெறியினை முழுமையாக பூர்த்தி செய்துள்ளனர். இதனால், தரப்படுத்தப்பட்ட பொது நூலகங்களில் குறைந்தளவான நூலகங்களே

தொழில்சார் தகைமையுடைய ஊழியர்களால் நிர்வகிக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிந்தது. ஏனையவை நூலகத்துறையில் தொழில்சார் தகைமையற்ற நூலக உதவியாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் அதியுயர் தரத்தில் மிக மிக சொற்ப அளவிலான (0.6%, n=2) நூலகர்களே காணப்படுகின்றனர். மேலும், திறன்களை பொறுத்தவரையில் நூலகர்களுக்கு தொடர்பாடல் திறன்களும் (M=2.63) மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் சம்பந்தமான திறன்களும் (M=2.91) குறைவாகக் காணப்படுகின்றது. நூலக உதவியாளர்களுக்கு தொடர்பாடல் திறன்களும் (M=2.75), நூலகங்களுக்கு நூலகத்திற்கு புதிய யோசனைகளைக் கொண்டு வருதல் சம்மந்தமான திறன்களும் (M=2.84), தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான திறன்களும் குறைவாகக் காணப்படுகின்றது (M=2.34). அத்துடன், பொது நூலகங்களில் நூலக ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரதான சவால்களாக, பதவி உயர்விற்கான சந்தர்ப்பங்கள் குறைவு, நிரந்தர வெற்றிடங்கள் தகுதியான நபர்களால் நிரப்பப்படுவதில்லை, நூலக கொள்கைகள், விதிகள், சுற்றறிக்கைகள் உரிய காலத்தில் மீள் திருத்தப் படுவதில்லை, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான போதிய வாய்ப்புக்கள் இல்லை, ஆட்சேர்ப்பில் முறைகேடுகள் இடம்பெறுகின்றமை என்பன சுட்டிக்காட்டப்பட்டன. இவ்வாய்வின் பரிந்துரைகளாக தகைமை மற்றும் திறமை வாய்ந்த நபர்களை பொது நூலக நூலகர்களாக நியமித்தல், நூலக ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்கமைத்தல், காலத்திற்கு காலம் சுற்றறிக்கைகளையும் நூலக கொள்கைகளையும் மீள் திருத்தம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்மொழியப்பட்டது. இதன் மூலம் சமூக தகவலறிவை மேம்படுத்து வதில் முக்கிய பங்காற்றும் கிழக்கு மாகாண பொது நூலக ஊழியர்கள் எதிர்நோக்கும் சவால்களை நிவர்த்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** பொது நூலகம், மனிதவளம் பொது நூலக ஊழியர்கள், சவால்கள், நூலக திறன்கள்

# வாசகர் சேவைகளை மேற்கொள்ளும் போது அட்டாளைச்சேனை பிரதேச சபை நூலகங்கள் எதிர்நோக்கும் சவால்கள்

**அப்துல் கரீம் அன்வர் சதாத்**
பட்டய நூலகர், பொது நூலகம், அட்டாளைச்சேனை

*anversathath1973@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

அட்டாளைச்சேனை பிரதேச சபையானது, கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளது. இப்பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் ஐந்து பொது நூலகங்கள் இயங்குவதுடன், மூவின மக்களையும் தன்னகத்தே கொண்ட பரந்த ஒரு பிரதேசமாகும். இப்பிரதேச ஆட்புல எல்லைக்குள் தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்விக் கல்லூரி, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என பல்வேறுபட்ட நிறுவனங்கள் அமைந்துள்ளன. எனவே, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள பொது நூலகங்களை பாமர மக்கள் முதல் ஆய்வாளர்கள் வரை பயன்படுத்துகின்றனர். நூலகம் ஓர் வளரும் நிறுவனம் என்ற அடிப்படையில் நூலகத்தின் பிரதான நோக்கமாக இருப்பது அதன் வாசகர்கள். எனவே, வாசகர்களுக்கான சேவையினை திறம்பட ஆற்றுகின்ற போதே அந் நூலகமானது தனது நோக்கத்திற்கு அமைய வினைத்திறனான சேவையை வழங்க முடியும். அந்த வகையில், இந்த ஆய்வின் நோக்கமானது அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச பொது நூலகங்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை ஆராய்வதாகும். ஆய்விற்காக இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஐந்து பொது நூலகங்களும் கருத்தில் கொள்ளப்பட்டதுடன், வினாக்கொத்து, கள ஆய்வு, அவதானம் போன்ற ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டன. ஆய்வு முடிவாக வாசகர்களின் தேவையறிந்து சேவை வழங்குவதில் இப்பிரதேச நூலகங்கள் குறிப்பிடத்தக்க அளவில் செயற்படுகின்ற போதிலும், வினைத்திறனான சேவையை வழங்க சில விடயங்கள் தடையாக உள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாசகர்களின் தேவையறிந்து தகவல் பெற்றுக் கொள்வதில் நிதி நெருக்கடியும், நிர்வாகிகள் நூலக அபிவிருத்திக்கு வழங்கும் ஒத்துழைப்பில் காட்டும் அசமந்த போக்கும், அட்டாளைச்சேனை பிரதேச சபை நூலகங்களில் கடமையாற்றும் மொத்த நூலக ஊழியர்களில், 12.5% த்திற்கும் குறைவானவர்களே நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப உயர் 'டிப்ளோமா' தொழில்சார் தகைமையை பூர்த்தி செய்துள்ளமையும், ஆளணி பற்றாக்குறையும்

நூலக அபிவிருத்திற்கு சவாலாக உள்ளமை இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. எனவே, நிர்வாகிகளுக்கு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அறிவார்ந்த சமூகத்தை நூலகங்கள் வாயிலாக கட்டியெழுப்பலாம் என்ற தோற்றப்பாட்டை எடுத்துரைப்பதன் மூலமும், நூலக சேவைகளை திறம்பட மேற்கொள்ள, போதுமான அளவு நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதாலும், தொழில்சார், கணனி தகைமையுடைய நூலக ஊழியர்கள் உள்வாங்கப்படுதல் மூலமும் நூலகங்களில் வினைத்திறனான வாசகர் சேவையை வழங்கலாம் என இவ் ஆய்வு பரிந்துரை செய்கிறது.

**திறவுச் சொற்கள்:** பொது நூலகங்கள், வாசகர்கள், வாசகர் சேவை, தகவல் வளங்கள்,

# நூலக சேவையில் கண்டறியும் திறனின் (Locational Skill) பயன்பாடு மட்டக்களப்பு மண்முனைப்பற்று பொது நூலக ஊழியர்களை அடிப்படையாக் கொண்ட ஆய்வு

**B. பிரசாந்தன்**
சிரேஷ்ட உதவி நூலகர், சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

*prashanthanb@esn.ac.lk*

**ஆய்வுச்சுருக்கம்**

நூலக சேவையில் பாவனையாளர்களின் தேவையினை பூர்த்தி செய்வதற்காக அவர்களின் தேவைக்கு பொருத்தமான தகவல் வளங்களை நோக்கி வழிப்படுத்தல் என்பது நூலக உத்தியோத்தர்களின் பிரதான செயற்பாடுகளுள் ஒன்றாகும். இவ் வகையில் பொருத்தமான தகவல் வளங்களை நோக்கி பாவனையாளர்களை வழிப்படுத்தல் என்ற வினைத்திறனான சேவையினை வழங்குவதற்கு தகவலறிதிறன் (Information Literacy) சார்ந்த பல்வேறு திறன்கள் நூலக சேவையில் பங்களிப்பினை வழங்கின்றன. அவற்றுள் கண்டறியும் திறன் (Locational Skill) காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்றது. இப் பின்னனியில் இவ் ஆய்வானது நூலக பாவனையாளர் நேர்த்தியான தகவல்களை அணுகுவதற்கு வழிப்படுத்துவதற்காக நூலக உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய கண்டறியும் திறனை மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச நூலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதாக அமைகிறது. கண்டறியும் திறனானது நூலகப்பட்டியலாக்கத்தின் பயன்பாடு பகுப்பாக்கத்திட்டத்தின் பயன்பாடு, பல்வேறுபட்ட தகவல் வளங்களை நோக்கி பாவனையாளர்களை வழிப்படுத்தல் மற்றும் எண்ணிம சேவையில் நேர்த்தியான இணையவழிப் பயன்பாட்டை நோக்கி வழிப்படுத்தல் என்ற நான்கு செயற்பாடுகளின் / விடயங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வு மாதிரியாக மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள அனைத்து பொதுநூலகங்களும்(06) அங்கு கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் (14) கருத்தில் கொள்ளப்பட்டனர். இவ் ஆய்வானது அளவாய்வு முறையினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை நேர்காணல், வினாக்கொத்து என்பவற்றினை ஆய்வு கருவிகளாக பயன்படுத்தி ஆய்வின் முடிவுகள் இனங்காணப்பட்டன. இவ்வகையில் ஆய்வுக்குட்படுத்திய உத்தியோகத்தர்களிடம் கண்டறியும் திறன்சார் விடயங்கள் ஓரளவு திருப்தி நிலையை பிரதிபலிக்கின்ற போதிலும் வேறு சில விடயங்கள் மேலும்

முன்னேற்றம் காணப்பட வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றன என்பதனை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளதுடன் இத் திறனின் விருத்திக்கு சவாலான பிரதான இரு விடயங்களான பௌதீகவளம் சார் சவால், தொழினுட்ப அறிவுசார் சவால்களையும் இவ் ஆய்வு இனங்கண்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** தகவல் அறிதிறன், கண்டறியும் திறன், பொது நூலகம்,

# பொது நூலகங்களை சமூக இணைப்புச் செய்வதில் நூலகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

**எம்.ஏ.சி. ஹரீஷா**
நூலகர், மருதமுனை மருதூர்க்கனி ஞாபகார்த்த பொது நூலகம்

*hareeshahareesha19@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு சமூகத்தின் கல்வி, கலை, சமூக, அரசியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு உட்பட பிற விடயங்கள் தொடர்பான தகவல் சேவைகளை வழங்குகின்ற ஒரு முதன்மை நிறுவனமாக பொது நூலகங்கள் காணப்படுகின்றன. நூல்கள், பருவ இதழ்கள், பத்திரிகைகள், ஒலி, ஒளி சாதனங்கள், சுவடிகள், வரலாறுகள், ஆவணங்கள் போன்றவற்றை சேகரித்து, பாதுகாத்து தகவல் சேவைகளை சமூகத்துக்கு வழங்குகின்ற ஒரு நிறுவனமாக பொது நூலகங்கள் செயற்பட்டாலும், தற்போது சமூகத்தின் அறிவுத் தேடலிலும், தொழில் முறைமையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாலும், சகல துறைகளிலும் நவீன தொழில்நுட்ப யுக்திகள் ஆதிக்கம் செலுத்தி வருவதாலும் பொது நூலகங்களுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு குறைந்து கொண்டு வருகிறது. பொதுவாக பொது நூலகங்கள் ஆளணிப் பிரச்சினை, மனிதவளப்பற்றாக்குறை, பௌதீகவளப் பிரச்சினை, நிதிப் பற்றாக்குறை, தொழில் சிறப்புத்தேர்ச்சியற்ற ஊழியர்கள், நிருவாகச்சிக்கல், நவீன தொழில்நுட்ப வசதி, விரிவாக்கற்சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், நூலக தன்னியக்கமாக்கல் சேவை செயற்பாடுகள், இணையதள வசதிகள் போன்றவை சவால்களாகவும் பிரச்சனைகளாகவும் காணப்படுகின்றன. அந்த வகையில் காலத்திற்கு ஏற்ப சமூகம் எதிர்பார்க்கும் தகவல் சேவைகளை பெற்றுக் கொள்ளும் முறைகளை கண்டறிந்து அவற்றை சமூகத்துக்கு வழங்க பரிந்துரை செய்வதோடு பொது நூலகங்களை சமூக இணைப்புச் செய்து ஆற்றல் மிக்க சமூகத்தை கட்டி எழுப்புவதே ஆய்வின் நோக்கமாகும். இது தொடர்பாக கல்முனை மாநகர சபை மற்றும் களுதாவளை பிரதேச சபை ஆகிய நூலகர்கள், நூலகப் பொறுப்பாளர்களோடு தொலைபேசி மற்றும் நேரடி பேட்டி மூலமும், ஆய்வாளர் பல நூலகங்களில் கடமையாற்றிய அனுப்புவங்களின் அடிப்படையிலும், வாசகர்கள் பலரின் வாய்மொழி மூல தகவல்களைக் கொண்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதின் அடிப்படையில், பொது நூலகங்கள் வெறுமனே பத்திரிகைகளை வாசிக்கும் இடமாகவும், நூல்களை இரவல் வழங்கும் இடமாகவும், உசாத் துணை நூல்களை வாசித்து குறிப்பெடுக்கும் இடமாகவும் இல்லாமல் புத்தக வெளியீடுகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கலை கலாச்சார நிகழ்வுகள் இடம் பெறுகின்ற ஒரு நிறுவனமாகவும், தகவல் சேவைகளை

இணையதளங்களின் ஊடாக வேகமாகவும், முதன்மையாகவும் வழங்குகின்ற நிறுவனமாகவும், சிறந்த உட் கட்டமைப்பு வசதிகளுடனும், தொழில்நுட்ப வசதிகளுடனும் சமூகம் எதிர்பார்க்கிறது என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே நூலகங்களின் தரத்திற்கு ஏற்ப ஆளணிகளை நிரப்பி நூலகர்களுக்கும், நூலக சேவையாளர்களுக்கும் நூலகத் தகவல் சேவைகள், தொழில்நுட்ப பயிற்சிகள், மொழித்தேர்ச்சி தொடர்பான தொழில் முறை தகுதிகளை வளர்த்துக்கொள்ள பயிற்சிகள் வழங்கப்படுவதோடு நூலகங்களுக்கென்று பௌதீக வளங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட விரிவாக்கற்சேவைகளை வழங்கக்கூடிய வசதிகள் கொண்ட கவர்ச்சிகரமான தோற்றம் உடைய கட்டிடங்களும் சேவைகளும் மாற்றி அமைக்க வேண்டும். மேலும் உளராட்சி மன்றங்களும், அரசும் முன்னெடுத்துச் செல்லும் அபிவிருத்தி திட்டங்களிலும், நிதி பங்களிப்பிலும் பொது நூலகங்களுக்கு முன்னுரிமை அளித்து தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கி, சமூகம் எதிர்பார்க்கும் சேவைகளை பொது நூலகம் வழங்க நூலகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது இவ்வாய்வின் பரிந்துரையாகும். இந்த பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் பொழுது சமூகம் எதிர்பார்க்கும் சேவைகளை சிறப்பாக வழங்கி பொது நூலகங்களை சமூகத்தோடு இணைப்புச் செய்ய முடியும்.

**திறவுச்சொற்கள்:** சமூக இணைப்பு, விரிவாக்கல் சேவைகள், ஆற்றல் மிக்க சமூகம், தகவல் சேவைகள்

# மருதமுனை பொது நூலகத்தில் சமமான தகவல் வழங்குவதில் உள்ள சவால்கள்: ஒரு சூழல் ஆய்வு

**முஹம்மது அபூபக்கர் பரீஸ்[1], உதுமாலெவ்வை முஹம்மது பவுஸ்[2]**
[1, 2] நூலகம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*mohamedfarees82@gmail.com*

## ஆய்வுச்சுருக்கம்

பொது நூலகம் நவீன சமூகத்தில் இன்றியமையாததாக மாறியுள்ளது. சிறுவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், தொழிலாளர்கள், ஓய்வு பெற்றவர்கள் மற்றும் அங்கவீனர்கள் என பல்வேறு தரப்பினர் பொது நூலகத்தின் வாசகர்களாவர். சமூக-பொருளாதார நிலை, புவியியல், இருப்பிடம் அல்லது பால்நிலை, இனம், மதம், கலாச்சாரப் பின்னணி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனி நபர்களுக்கும் சமமான தகவல் அணுகலை ஊக்குவிப்பதில் பொது நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை பொது நூலகம் வாசகர்களுக்கு சமமான தகவல் வழங்குவதில் எதிர்கொள்ளும் சவால்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருதமுனையானது கிட்டத்தட்ட 24000 மக்கள் தொகையைக் கொண்ட கிழக்குக் கரையோரம் அமைந்த 100% முஸ்லிம் மக்கள் வாழும் கிராமமாகும். சிறந்த கல்விப் பின்புலத்தைக் கொண்ட இக்கிராமமானது நெசவுத் தொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட மக்களைக் கொண்டுள்ளது. இதன் வடக்கு, தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களில் பாண்டிருப்பு, நீலாவணை மற்றும் துறைநீலாவணை ஆகிய சகோதர இன மக்கள் வாழும் கிராமங்களும் அமைந்துள்ளன. இவ்வாய்வானது மருதமுனை பொது நூலகத்தில் சமமான தகவல் வழங்குவதற்கு இடை!றாக உள்ள சவால்களை ஆராய்ந்து சாத்தியமாக உள்ள தீர்வுகளைக் கண்டறிதல் என்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. நோக்க மாதிரி முறையில் குறித்த ஒரு நாள் நூலகத்திற்கு வருகைதந்த சிறுவர்கள், பருவ வயதினர், அரச ஊழியர்கள், ஓய்வு நிலை உத்தியோகத்தர்கள், சகோதர கிராமத்தைச் சேர்ந்த வாசகர்கள் போன்ற 50 வாசகர்களிடம் வினாக்கொத்து வழங்கி தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்வில் வாசகர்களில் 14 வீதத்தினர் 6-15 வயதுக்குட்பட்டோர் களாகவும், 42 வீதத்தினர்16-25 வயதுக்குட்பட்டோர்களாகவும், 14 வீதத்தினர் 26-35 வயதுக்குட்பட்டோர்களாகவும், 18 வீதத்தினர் 36-45 வயதக்குட்பட்டோர்களாகவும் 12 வீதத்தினர் 45 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். முக்கிய சவால்களில் எண்ணிமப்பிளவு, வரையறுக்கப்பட்ட நிதி, புவியியல் அணுகல் தடைகள், மொழி

மற்றும் எழுத்தறிவு தடைகள், சேகரிப்பு பன்முகத்தன்மை சிக்கல்கள், தொழில் நுட்ப உட்கட்டமைப்பு வரம்புகள் மற்றும் தணிக்கை, அறிவுசார் சுதந்திரம் தொடர்பான கவலைகள் ஆகியவை அடங்கும். 50 வீதத்தினர் மேற்சொன்ன சவால்கள் அனைத்தும் பகுதியளவில் காணப்படுவதாகவும், 40 வீதத்தினர் குறிப்பாக வரையறுக்கப்பட்ட நிதி, குறிப்பிட்ட சமூகங்களின் ஆதரவு குறைவாக உள்ளதாகவும், 60% வீதத்தினர் நன்கு பயிற்றப்பட்ட ஊழியர்களின்மையும் தாய் நிறுவனத்தின் மட்டுப்படுத்தப்பட்ட அனுசரணையும் பாரியளவில் தடங்கல்களாக இருப்பதனை குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான சவால்களை ஏற்றுக்கொண்டு அவற்றை எதிர்கொள்வதன்மூலம் பொது நூலகங்கள் தங்களது பல்வேறு சமூகங்களுக்கு சிறப்பாகச் சேவை செய்ய முடியும். மற்றும் அனைத்து தனி நபர்களுக்கும் சமமான தகவல் அணுகல் என்ற அடிப்படைக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் முடியும். பொருத்தமான நுணுக்கங்களையும் குறைபாடுகளையும் கண்டறிந்து செயற்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெறுவதற்கான யுக்திகளை உருவாக்க முடியும் என்பது ஆய்வின் பிரதான பரிந்துரையாகும்.

**திறவுச் சொற்கள்:** பொது நூலகம், சமமான தகவல்கள்

# மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தி சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குவதனூடாக குறைந்த கல்வியறிவு கொண்ட சமுதாயத்தை குறைப்பதில் பொது நூலகங்களின் வகிபாகம்

**ராஜு அச்சலா சுகந்தினி**
நூலக சேவகர், ஏறாவூர் நகர சபை, ஏறாவூர்

*asugamdini@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

நூலகங்கள் காலத்தின் தேவைகருதி பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சியடைந்து தற்போது நூலகத்திற்கு வருகைதராத வாசகர்களுக்கும் சேவைகளை வழங்கக்கூடிய தகவல்வள நிலையங்களாக உருவெடுத்துள்ளன. நூலகங்களைவிட விரைவாகவும், துல்லியமாகவும் தகவல்களை அள்ளித்தரும் சாதனங்களாக இணையதளங்கள் உருவெடுத்துள்ளபோதிலும் சரியான, உண்மையான தகவல்களை ஆதாரபூர்வமாக நிறுவுகின்ற நிலையங்களாக விளங்குவதால் நூலகங்கள் சமூகத்தோடு இணைந்த செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டியதோடு வருங்கால சமுதாயத்தின் கல்வியறிவினை விருத்தி செய்வதிலும் பங்கெடுக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தி சமூகத்தின் கல்வியறிவை உயர்த்துவதில் பொதுநூலகங்களின் வகிபாகம் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது. ஏறாஊர் நகரசபை ஆட்புல எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தல், சிறந்த கல்விச்சமூகத்தை உருவாக்குதல், கல்வியறிவில் பின்தங்கியோர் எண்ணிக்கையைக் குறைத்தல், சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அக்கறை செலுத்தல், நாட்டினது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் பங்களிப்புச் செலுத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகும். இதற்காக எமது பிரதேசத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு-மத்தி கல்விவலயத்திற்குட்பட்ட ஐந்து பாடசாலைகளும், மட்டக்களப்பு கல்விவலயத்திற்குட்பட்ட மூன்று பாடசாலைகளும் இவ்வாய்விற்கெனத் தெரிவு செய்யப்பட்டன. இப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாளர்கள், நூறு ஆரம்பப்பிரிவு மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். நேர்காணல், வினாக்கொத்து, புள்ளிவிபரங்கள், ஆவணச்சான்றுகள் நேரடி அவதானிப்பு போன்ற கருவிகளினூடாக இவ்வாய்விற்கான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு எண்ணியல் ஆய்வு அடிப்படையில் சிறந்த பகுப்பாய்வு, மூளைச்சலவை, மதிப்பீடு, கண்காணிப்பு ஆகிய உத்திகளினூடாக முடிவுகள் கண்டறியப்பட்டன. இவ்வாய்வின்போது உலக தரிசனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியம முறையிலான கருவி பயன்படுத்தப்பட்டது. இக்கருவியானது ஆரம்பப்பிரிவு மாணவர்களின் தரங்களுக்கேற்ப அவர்கள் வாசிப்பில் அடைய வேண்டிய தேர்ச்சி மட்டத்தைப் புலப்படுத்தும். இக்கருவியை உபயோகித்து மாணவர்களை மதிப்பீடு செய்து பெறப்பட்ட முடிவுகளின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள ஆரம்பப்பிரிவு மாணவர்களுள் 35% ஆனோர் அடைய வேண்டிய தேர்ச்சி மட்டத்திலிருந்தும் குறைந்த வெளிப்பாட்டினைக் காட்டுவோராக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் வாசிப்பதற்கும், வாசித்தவற்றைக் கிரகிப்பதிலும், அப்பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் பின்தங்கிய, மெல்லக்கற்கும் மாணவர்களாக இருந்தனர். சிறந்த கல்விப் பின்புலம் கொண்ட பெற்றோரின் பிள்ளைகள்கூட வாசிப்பில் பின்தங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவர்களுள் சிலர் மிகவும் விரைவாக வாசிப்பை முன்னெடுத்தபோதிலும் வினாக்களுக்கு விடையளிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கினர். இதுகுறித்து அம்மாணவர்களோடு நேரடித் தொடர்பிலுள்ள அவர்களின் வகுப்பாசிரியர்களோடு கலந்துரையாடியபோது இத்தகைய மாணவர்கள் கவனயீனம் காரணமாகவே அவ்வாறான தவறுகளை விடுவதாகத் தெரிவித்திருந்தனர். முற்றிலும் வாசிப்பதற்கு சிரமப்பட்ட மாணவர்கள் குறித்து ஆராய்ந்தபோது அவர்களின் குடும்பச்சூழலில் காணப்படும் பிரச்சனைகள், போசாக்கற்ற உணவுகள், பெற்றோர் பிரிந்திருத்தல் போன்ற இன்னோரன்ன காரணங்களால் உளவியல் ரீதியாக தாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இம்மாணவர்கள் பாடசாலைச்சூழலைவிட வெளிச்சூழலையே அதிகம் விரும்புவார்கள். அவர்களோடு சிறந்த நட்புறவு கொண்டு நீதிக்கதைகள், சித்திரக்கதைகள் பாடல்கள், விளையாட்டுக்கள், குறும்படங்கள், சித்திரங்கள் மூலம் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதனூடாக இவர்களது வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்கு பொதுநூலகங்களே பொறுப்பெடுக்க வேண்டும் எனும் அடிப்படையில் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான விஷேட வாசிப்புச் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு எமது நூலகங்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இச்சமூகத்தின் கல்வியறிவை மேம்படுத்தலாம்.

**திறவுச் சொற்கள்:** கல்வியறிவு, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், நூலகங்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், வாசிப்பு பழக்கம்

# மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகங்களின் சேவை மதிப்பீடு

**றமா ராசலிங்கம்[1], த.சிவராணி[2], செ.சாந்தருபன்[3]**
[1]நூலகப்பரிசாரகர் பொது நூலகம் பாரதிலேன் மாநகர சபை, மட்டக்களப்பு
[2]நூலகர் பொது நூலகம் மாநகர சபை மட்டக்களப்பு மற்றும் [3]பிரதி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்

*ramarasalingam@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

நூலக செயற்பாடுகளை சிறப்புற முன்னெடுத்துச் செல்வதற்கு நூலகத்தின் முக்கிய பங்காளிகளான வாசகர்களின் பின்னூட்டம் மிகவும் அவசியமாகும். இவ்வாறான பின்னூட்டங்கள் நூலகத்தின் செயற்பாடுகளை மதிப்பிடவும் அவற்றினை மேலும் வளப்படுத்தவும் உதவும். இந்த வகையில் மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலக வாசகர்களின் பின்னூட்டங்களின் மூலம் பொதுநூலகங்களின் சேவை மதிப்பீட்டினை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் ஒரு பிரதான பொது நூலகமும் அதன் பன்னிரண்டு கிளை பொது நூலகங்களும் உள்ளன. பொது நூலக வாசகர்களிடையே எழுமாற்று மாதிரி எடுப்பு முறையின் மூலம் 101 நூலகப்பயனாளர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு பொது நூலகங்களின் செயற்பாடுகள் பற்றிய அவர்களது பின்னூட்டங்கள் பெறப்பட்டன. வினாக்கொத்துக்கள் மூலம் வாசகர்கள் நூலகத்தை பாவிக்கும் நோக்கம், பாவிக்க விரும்பும் நேரம், நூலகத்தின் சிறப்பம்சங்கள், நூலகத்தில் முன்னேற்ற வேண்டிய தேவைகள் பற்றி வினாக்கள் அமைந்திருந்தன. வினாக்கொத்துகள் அளவறி முறையிலும் பண்பறிமுறையிலும் பின்னர் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நூலகத்தின் சிறப்பம்சங்களும், நூலகத்தில் முன்னேற்ற வேண்டிய தேவைகளும் நூலக சேகரிப்பு, பௌதீக வளம், மனித வளமும் முகாமைத்துவமும் என்னும் தலைப்பின் கீழ் ஆராயப்பட்டது. பண்பறி பகுப்பின் முடிவுகளாக போதுமான சேகரிப்புகள், சேகரிப்புகளின் சிறப்பான ஒழுங்குபடுத்தல் அரிதான ஆவணங்கள் காணப்படுகின்றமை என்பன நூலக சேகரிப்பு பற்றிய சிறப்பம்சமாக வாசகர்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. பௌதீக வளம் தொடர்பில் அமைதியான, துப்பரவான காற்றோட்டமுள்ள மின் விசிறிகள், மின்விளக்குகள் கொண்ட இடமாகக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டது. மனித வளம் தொடர்பாக நூலக ஊழியர்கள் ஒத்துழைப்பு வரவேற்கும் தன்மை வாசகர்களுக்கு உதவி புரியும் தன்மை என்பன கூறப்பட்டன. நூலகத்தை முன்னேற்ற வேண்டிய பகுதிகளில் மேலதிக புத்தகங்கள், குறிப்பாக புதிய பாடத்திட்டங்களுக்கான புத்தகங்கள், கதைப்புத்தகங்கள்,

சட்டமூலங்கள், மாதாந்தச் சஞ்சிகைகள், ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் என்பன அவசியமானவை என்பன குறிப்பிடப்பட்டன. புத்தகங்கள் இரவல் வழங்கும் காலத்தினையும், நூலகம் திறந்திருக்கும் நேரத்தினையும் அதிகரிக்குமாறும் கூறப்பட்டது. பௌதீக வளங்கள் தொடர்பாக போதிய அளவு மின்விசிறிகள் அமைக்கவேண்டும், தூய மற்றும் போதுமான அளவு மலசலகூட வசதி என்பன காணப்படவேண்டும், எண்ணிம தொழினுட்ப மற்றும் இணைய வசதி என்பன அமைந்திருக்க வேண்டும், இட வசதி அதிகரிக்கப்படவேண்டும், கவர்ச்சிகரமான நூலக கட்டிடம், போட்டோ பிரதி சேவை என்பன காணப்படவேண்டும், போதிய அளவான தளபாடங்கள் அவசியம் என்பன குறிப்பிடப்பட்டன. வாசகர்கள் நூலகங்கள் பற்றி வழங்கிய ஒட்டுமொத்த மதிப்பீடானது 16.8 வீதம் திருப்தி, 60.4 வீதம் நன்று, 20.8 வீதம் மிக நன்று என்று காணப்பட்டது. இத்தகைய வாசகர் பின்னூட்டங்களின் அடிப்படையில் நூலக சேவைகளும் அவற்றின் வளர்ச்சியும் திட்டமிடப்படவேண்டும். வாசகர்கள் குறிப்பிட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்போது நூலகம் பற்றிய மதிப்பீடு மேலும் உயர்வடையும். பொது நூலகங்களின் தாய் நிறுவனங்கள் நூலகம் தொடர்பான திட்டமிடலின் போது இத்தகைய வாசகர் பின்னூட்டங்களைக் கருத்தில் கொள்வது நன்றென ஆய்வாளர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** பின்னூட்டங்கள், நூலகப்பயனாளர்கள், பொது நூலகம்

# இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொது நூலகங்களின் சவால்களை ஆராய்ந்து அவற்றின் நிலைத்தன்மைகளை மேம்படுத்துதல்

**ஏ.எல்.எம். முஸ்தாக்**
நூலகர், கல்முனை பொது நூலகம், கல்முனை மாநகர சபை, கல்முனை

*musi27lk@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொது நூலகங்கள் வாசிப்பு மற்றும் எழுத்தறிவு வளர்ச்சி, தகவல் அணுகல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு அத்தியாவசிய மையங்களாக செயல்படுகின்றன. இருப்பினும், இந்த பாத்திரங்களை திறம்பட நிறைவேற்றும் திறனைத் தடுக்கும் பல தடைகளை பொது நூலகங்கள் எதிர்கொள்கின்றன. இவ் ஆய்வானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொது நூலகங்கள் எதிர்கொள்கின்ற தடைகள் மற்றும் சவால்களை ஆராய்வதும் மற்றும் அவற்றின் நிலைத்தன்மைகளை மேம்படுத்துவதற்கான உத்திகளை பரிந்துரைப்பதையும் நோக்கமாகக்கொண்டது. இலங்கையின் கிழக்கு மாகாண மட்டக்களப்பு, அம்பாரை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில பணியாற்றுகின்ற 26 நூலகர்களிடமிருந்து அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் கருத்துக்கள் நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலம் பெறப்பட்டது. இவ்வாய்வு அளவுரீதியிலான அணுகுமுறையை குறிப்பாக நேர்காணல் தரவுகளில் உள்ள விடயங்கள் மற்றும் போக்குகளை அடையாளம் காண கருப்பொருள் பகுப்பாய்வுமுறையை பயன்படுத்தியது. முதன்மை சவால்களாக நிதிக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்ப வசதிகள், சமூகத் தேவைகள், பணியாளர் பற்றாக்குறை, இட நெருக்கடி, மற்றும் பிற நவீன சமூக சேவைகளுடனான போட்டி என்பன அடையாளம் காணப்பட்டன. மேலும், சிறப்பு தர நூலகங்கள் இல்லாதது மற்றும் விசேட தர (Supra Grade) நூலகர்களுக்கான ஏற்பாடுகள் இம்மாகாணத்தில் இல்லாதிருப்பது பொது நூலகங்களின் அபிவிருத்தியினை பின்னடையச் செய்கின்றது. வளங்களை பெறுவதற்கும், உட்கட்டமைப்பைப் பராமரிப்பதற்கும், பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் அதிக நிதி ஒதுக்கீடு அவசியப்படுகின்றது. அவ்வாறின்றேல் இது பொது நூலகங்களின் திறனைக் குறைக்கிறது. மேலும், டிஜிட்டல் வளங்கள், நவீன சேவைகளை வழங்குதல் மற்றும் நிலைநிறுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய செலவுகளைக் கருத்தில் கொண்டு, தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு

முகங்கொடுப்பதற்கு ஏற்ப பாதீடுகள் இல்லாதது மிகப்பெரிய சவாலாக அடையாளங்காணப்பட்டது. அதேபோல் நூலகவியலில் தேர்ச்சியான பணியாளர் பற்றாக்குறை மற்றும் நூலக இடவசதிகள் பிரச்சினை அதிகம் காணப்படுகின்ற அதே வேளையில், நூலகங்கள் சமூகத்தின் தேவைகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக இவ்ஆய்வு போதிய நிதி வளங்களை ஒதுக்குதல், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஏற்படுத்தல், சமூக ஆர்வலர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஈடுபாடுகளை அதிகரித்தல், பணியாளர்களின் தொடர்ச்சியான தொழில்வான்மை விருத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு, சிறப்பு தர நூலகங்கள் மற்றும் நூலகர்கள் போன்றவைகளை பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** நிலைத்தன்மை, பொது நூலகங்கள், கிழக்கு மாகாணம், நூலகர்கள், சவால்கள்

## List of Reviewers

1. Dr. (Mrs.). K. Chandrasekar, Deputy Librarian, University of Jaffna
2. Dr. (Mrs.). M. M. Mashroofa, Senior Assistant Librarian, South Eastern University of Sri Lanka
3. Dr. S. Ketheeswaren, Deputy Librarian, University of Jaffna
4. Mr. A. M. Nahfees, Senior Assistant Librarian, South Eastern University of Sri Lanka
5. Mr. B. Prashanthan, Senior Assistant Librarian, Eastern University, Sri Lanka
6. Mr. M. C. M. Azwer, Senior Assistant Librarian, South Eastern University of Sri Lanka
7. Mr. S. Santharooban, Deputy Librarian, Eastern University, Sri Lanka
8. Mr. S. Shanmugathasan, Senior Assistant Librarian, Vavuniya University
9. Mr. T. Ramanan, Senior Assistant Librarian, University of Colombo
10. Mrs. J. Lavanya, senior Assistant Librarian, Eastern University, Sri Lanka
11. Mrs. K. Murugathas, Deputy Librarian, University of Jaffna
12. Mrs. T. M. Seneviratne, Senior Assistant Librarian, University of Moratuwa
13. Mr. S. L. M. Sajeer, Senior Assistant Librarian, South Eastern University of Sri Lanka

## Author Index (ஆசிரியர் சுட்டி)


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அச்சலா சுகந்தினி, ரா. | 46–47 |
| 2. | அன்வர் சதாத், அ. | 38–39 |
| 3. | அப்துல் ஹலீம், இ. | 24–25 |
| 4. | அபூபக்கர் பரீஸ், மு. | 44–45 |
| 5. | அலியார், அ. | 24–25 |
| 6. | இன்பம், ச. | 26–27 |
| 7. | குபேசன், இ. | 15–16 |
| 8. | சண்முகதாசன், சி. | 17 |
| 9. | சந்திரசேகர், க. | 34–35 |
| 10. | சாந்தரூபன், செ. | 48–49 |
| 11. | சஜீர், சு.லெ.மு. | 24–25 |
| 12. | சிவராணி, த. | 48–49 |
| 13. | சுதுசிங்கே, ச. | 34–35 |
| 14. | தயாளினி,பி. | 32–33 |
| 15. | தஸ்னீம், ம. ந. | 28–29 |
| 16. | நவ்பர்காந், மு.உ. | 30–31 |
| 17. | நவீரதன், கா. | 20–21 |
| 18. | நாபிலா, எம்.சீ. | 26–27 |
| 19. | பயாஸ், ச. ம. | 18–19 |
| 20. | பிரசாந்தன், ப. | 40–41 |
| 21. | மஸ்றூபா, மு.ம. | 22–23, 26–27 |
| 22. | முஸ்தாக், ஏ.எல்.எம். | 50–51 |
| 23. | முஹம்மது பவுஸ், உ. | 18–19, 22–23, 44–45 |
| 24. | ரவீந்திரன், வி. | 15–16 |
| 25. | ராசலிங்கம், ற. | 48–49 |
| 26. | விஜித்சரணியா, ஞா. | 18–19 |
| 27. | ஹரீஷா, எம். ஏ. சி. | 42–43 |
| 28. | ஜெகதீஸ்பரன், லா. | 36–37 |

**Sri Lanka Library Association**
**Organization of Professional Associations,**
**Sri Lanka Professional Centre,**
**275/75, Stanley Wijesundara Mawatha,**
**Colombo 07, Sri Lanka**
**Tel/Fax: +94-11-2589103**
**Email : info@slla.lk**

978 6245 987047